விலை: 50.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 13 வியாழக்கிழமை (29.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345

## ஆவா குழுவின் தலைவர் நேற்று நீதிமன்றில் சரண்

(யாழ்ப்பாணம்)

ஆவா குழுவின் தலைவர் என அடையாளப்படுத்தப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்த மோகன் அசோக் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று சரணடைந்தார். அவரை 14 நாள்க 23☛

## உயிராபத்து இருப்பதனால் பொலிஸ் பாதுகாப்பு வேண்டும்

### ஜனாதிபதிக்கு சி.வி.விக்னேஸ்வரன் கடிதம்

(யாழ்ப்பாணம்)

உயிராபத்து இருக்கும் காரணத்தினால் தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பை அனுமதிக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில், வடமாகாண முதலமைச்சராக என்னுடைய பதவிக்காலம் முடிந்ததன் பின்னர் என்னுடைய பிரத்தியேக பொலிஸ் பாதுகாப்பு அலுவலர்கள் தொடர்ந்து எனக்கு பாதுகாப்பு வழங்கி வந்துள்ளனர். சில காலங்களுக்கு முன்னர் என்னுடைய உயிருக்கு 23☛

### பெண்ணை அச்சுறுத்தி நகை அபகரித்த

## நிதி நிறுவன ஊழியர்கள் இருவருக்கு ஒரு வருட கடூழிய சிறை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

லீசிங் தவணைப் பணத்தை வசூலிப்பதற்காக வாடிக்கையாளரின் வீடு தேடிச் சென்று வீட்டிலிருந்த குடும்பப்பெண்ணை அச்சுறுத்திவிட்டு அவரது தங்க நகைகளை அறுத்துச் சென்றனர் என்ற குற்றத்துக்கு நிதி நிறுவனத்தின் ஊழியர்கள் இருவருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

நிதி நிறுவனத்தின் ஊழியர்கள், தவணைப் பணத்தை வசூலிப்பதற்கு ஒழுங்கு விதிகள் உள்ளன. அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த குடும்பப் 23☛

### 11 தமிழர்கள் கடத்தல்

## முப்படைகளின் பிரதானி கைது

(கொழும்பு)

முப்படைகளின் பிரதானி ரவீந்திர விஜேகுணரத்ன நேற்று குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(விரிவான செய்தி 3-ம் பக்கம்)

### பெரும்பான்மை இல்லாத நிலையில்

# பிரதமர் பதவியிலிருந்து உடனே விலக வேண்டும்

## மகிந்தவிடம் சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் குழு கோரிக்கை

(கொழும்பு) பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாதநிலையில் உடனடியாக பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு சர்ச்சைக்குரிய பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷவிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மகிந்த ராஜபக்‌ஷவை நேற்று காலை சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

உள்நாட்டிலும், அனைத்துலக அளவிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, தொந்தரவு கொடுக்காமல், உடனடியாக பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு, சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்‌ஷவிடம் கோரியுள்ளனர்.

எனினும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் 7 ஆம் நாள் அளிக்கப்படும் வரை, பதவியிலிருந்து விலகிக் கொள்ளும் எண்ணம் தனக்கு கிடையாது என்று மகிந்த ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால், தன்னை பதவியில் இருந்து நீக்கிக்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் கூறும்படியும் அவர் கூறியுள்ளார்.

பதவியில் நீடிப்பதால், மைத்திரிபால சிறிசேனவை நாட்டு மக்கள் விமர்சிப்பார்கள் என்றும் தன்னை விமர்சிக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 23☛

## தேர்தலில் தனித்து போட்டியிட சு.கட்சி திடீர் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடைபெறும் எந்த தேர்தலாக இருந்தாலும் எந்த கட்சியுடனும் கூட்டணி அமைக்காது வலுவான கட்சியாக தனித்து போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தீர்மானித்துள் 02☛

### கைதடிப் பகுதியில்

## பெண்ணிடம் சங்கிலி அபகரிப்பு; ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கைதடிப் பகுதியில் சங்கிலி அறுத்த ஒருவரை கைதடி வாலிபர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் 23☛

## ரணில் ஜனநாயகவாதி என்றால் பதவியை துறந்திருக்க வேண்டும்

### அமைச்சரவை பேச்சாளர் தயாசிறி



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க உண்மையான ஜனநாயகவாதி என்றால் கட்சித் தலைவர் பதவியை வேறு ஒருவருக்கு வழங்கியிருக்க வேண்டும். ஒரு நபருக்காக ஒட்டுமொத்த நாடும் பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சரும், அமைச்சரவைப் 23☛

## பாராளுமன்று இன்று கூடுகிறது ஆளுந்தரப்பு புறக்கணிக்க முடிவு

(கொழும்பு)

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் பாராளுமன்றம் இன்று காலை 10.30 மணிக்கு கூடவுள்ளது.

பிரதமர் அலுவலகத்துக்கு நிதி வழங்குவதை தடுக்கக்கோரும் பிரேரணையை ஐக்கிய தேசியக் முன்னணியை சேர்ந்த நவீன் திஸாநாயக்க, ரவி கருணாநாயக்க, நாலக்க பிரசாத் கொலன்னே, கவிந்த கேஷான் ஜெயவர்த்தன, ஹெக்டர் அப்புகாமி, சதுர சந்தீப சேனாரத்ன ஆகியோர் சபாநாயகருக்கு முன் வைத்திருந்தனர்.

இந்நிலையிலேயே நாடாளுமன்றம் இன்று கூடவுள்ள நிலையில் சபாநாயகர் அறிவிப்பைத் தொடர்ந்து பிரதமர் அலுவலகத்துக்கு நிதி வழங்குவதை தடுக்கக்கோரும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. இந்த விவாதத்தில் ஐக்கிய தேசிய முன்னணி 23☛

## வவுனியாவில் கஞ்சாவுடன் இருவர் கைது



(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளம் நோக்கி கேரளா 02☛

## ஜனாதிபதி தேர்தலை தற்போது நடத்தும் திட்டம் இல்லை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் முற்கூட்டியே நடத்தப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். 23☛

## நம்பிக்கையை நிரூபிக்கும் பிரேரணை எதனையும் எதிர்கொள்ளத் தயார்

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணை, நம்பிக்கையை நிரூபிக்கும் பிரேரணை எதனையும் எதிர்கொள்ளத் தயார் என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று புதன்கிழமை கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் அங்கு தெரிவிக்கையில், 23☛



### பொருளாதார நிபுணர்களுடன்

## ஜனாதிபதி, பிரதமர் விசேட சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷ மற்றும் பொருளாதார நிபுணர்கள் பங்குகொள்ளும் விசேட சந்திப்பொன்று நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலை குறித்து ஆராயும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதே வேளை, 2019 ஆம் 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## PHARMACIST EXAM COURSE

மருந்தியலாளருக்கான பரீட்சைக்கான புதிய வகுப்புகள் மார்கழி மாதம் **1**ஆம் திகதி சனிக்கிழமை காலை **8.30** மணிக்கு ஆரம்பமாகிறது. மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கான கல்வித்தகுதி **G. C. E O/L ENGLISH** சாதாரண சித்தி. **G. C. E A/L** இரசாயன பாடம் உட்பட மூன்று பாடங்களில் சாதாரண சித்தி. வயது எல்லை இல்லை. சனி, ஞாயிறுக்கிழமைகளில் **08.30 – 12.30** வரை நடைபெறும்.

**SRILANKA MEDICAL COUNCIL** இல் நீங்கள் மருந்தாள பயிலுநராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவம் யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு), 464, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில், மருந்தியலாளர் கல்வி இணைப்பாளர் நேரு Sir இடம் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம்.

**T/P 077 625 6292**

(6592)

## தேர்த...

ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உட்பட எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டணி சேராது தமது அரசியல் கொள்கையின் அடிப்படையில் இருந்தவாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர். (3)

### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222

உரும்பிராய்.

(6593)

### காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம் பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:- **076 835 1932, 021 223 2222**

உரும்பிராய்.

(6593)

# மகாஜன மாதாவின் கண்ணீர் அஞ்சலி



**திருமதி பாக்கியம் குணரத்தினம்**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின்
முன்னாள் அதிபரும், மகாஜனக் கல்லூரி கல்வி
அபிவிருத்தி நிதியத்தின் ஆளுகைச் சபை
உறுப்பினரும் கொழும்பு பழைய மாணவர் சங்க
முதன்மைக் காப்பாளருமாகிய
**திரு. குணரத்தினம் வேல்சிவானந்தன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பாக்கியம் குணரத்தினம்**
அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கல்லூரியில்
குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த
நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(4539)

கல்லூரிச்சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

## யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை

### பரிசளிப்பு விழா - 2018

காலம் : இன்று (29.11.2018) வியாழக்கிழமை காலை 9.30 மணி

இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

தலைவர் : **திரு.தி.ரவீந்திரநாதன்** (பாடசாலை முதல்வர்)

ஆசியுரை : **சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள்** (பிரதமகுரு செல்லக்கதிர்காமம் – நீர்வேலி)
**சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள்** (அரசகேசரிப் பிள்ளையார் கோவில்)

பிரதம விருந்தினர் : **பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன்** (முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர் : **திரு.நாகரத்தினம் தினேஷ்** (இலங்கை வங்கி முகாமையாளர்)
**திரு.பொன்னையா கிருஷ்ணானந்தன்** (பிரபல தொழிலதிபர், பவானி களஞ்சியம்)

கௌரவ விருந்தினர் : **திரு.மகாதேவன் சுதர்சன்** (சமுர்த்தி உத்தியோகத்தர் நீர்வேலி வடக்கு)

பரிசில் வழங்கல் : **திருமதி கௌரி சண்முகலிங்கன், MPhil** (யா/திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

விளம்பர அனுசரணை HARAN JEWELLERS 217, POWER HOUSE ROAD, JAFFNA.

பாடசாலை சமூகம்

(C-4530)

## கஞ்சா...

கஞ்சாவினை கடத்தி சென்றவர்களை கனகராயன்குளம் பொலிஸார் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கைது செய்துள்ளனர்.

இவ் விடயம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் யாழ் - புத்தளம் நோக்கி சென்ற வீல்ரோ கப் வாகனத்தை கனகராயன்குளம் பகுதியில் வழிமறித்து சோதனை மேற் கொண்ட போது அவ் வாகனத்தில் பயணித்த புத்தளத்தை சேர்ந்த 20,25 வயதுடைய இரு இளைஞர்களை 13 பொதி செய்யப்பட்ட கேரளா கஞ்சாவுடன் வாகனத்தையும் கனகராயன் குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிகவிசாரணைகளின் பின்னர் நேற்று வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத் தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (3-281)

# கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்
# பரிசளிப்பு விழாவும் - தரம் 5 புலமைப்பரிசில் பாராட்டு விழாவும்

## இன்று 2018.11.29 வியாழன் மாலை 3.00 மணி



குகபாலன் சுபேசனா– 189



லோகேஸ்வரன் சாதுரியன் – 185





சாந்தகுமார் நிஷான் – 166



பிறேம்குமார் கனியிசை – 180

புலமைப்பரிசில் பரீட்சையில் 10 மாணவர்கள்
வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை
97 வீதம் சித்தி...





முகுந்தன் விந்தனா – 172



இரத்தினசிங்கம் ஜென்சிகா – 172



ஜெயரூபன் அட்சரா – 174



சிவகுமார் சிந்துஷான் – 170



யுகதீபன் பிரதிக்ஷா – 182



ஸ்ரீரங்கநாதன் மதுரிகா – 176

சாதனை மாணவர்களையும், பரிசளிப்புவிழாவில் பரிசில்
பெறும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு
இந்த வெற்றிக்காக உழைத்த ஆசிரியர் குழாத்தினையும்
பாராட்டி வாழ்த்துகிறோம்.

கல்விச் சமூகம்
கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

(C-4531)

## 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# முப்படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர கைது!



(கொழும்பு)

**முப்படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன நேற்று குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

மாணவர்கள் உட்பட 11 தமிழர்கள் கடத்தல் விவகாரத்தில் பிரதான சந்தேக நபர் நேவி சம்பத்துக்கு அடைக்கலம் கொடுத்தமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள முப்படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு சி.ஐ.டி.யின் சமூக கொள்கை தொடர்பிலான விசாரணைப் பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் தனக்கு எந்த உத்தியோகபூர்வ அறிவித்தலும் கிடைக்கவில்லை. என்னை சி.ஐ.டிக்கு அழைத்து சி.ஐ.டியின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரோ, பொலிஸ்மா அதிபரோ, பாதுகாப்பு செயலாளரோ எந்த அறிவித்தலையும் அனுப்பவில்லை என அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்திருந்தார்.

அத்துடன் நீதிமன்றில் ஆஜராகத் தயார் எனவும் தெரிவித்திருந்தார். அதன்படி அவர் நேற்று நீதிமன்றில் ஆஜரானார்.

இந்நிலையில் நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் அட்மிரல் ரவீந்திர கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## ஹன்சாட் அறிக்கையை தந்திரமாக தயாரித்ததாக சபாநாயகர் மீது புகார்



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரிய, ஹன்சாட் அறிக்கையொன்றை தந்திரமாக தயாரித்தமை தொடர்பில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டினை பிவித்துரு ஹெல உறுமய கொழும்பு மோசடி விசாரணை பணியகத்தில் மேற்கொண்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஹன்சாட் அறிக்கையை சபாநாயகர் தந்திரமாக தயாரித்துள்ளதாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் பிரதி தலைவர் மதுமாதவ அரவிந்த தெரிவித்துள்ளார்.

இதனுடன் கடந்த 14, 15, 16, 19, 21 மற்றும் 23 ஆம் திகதிகளில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெறாததால் குறித்த அறிக்கையை ஏற்க முடியாது என அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கன் சபாநாயகரிடம் அறிவித்துள்ளனர்.

அவைத்தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட தரப்பினர் எழுத்து மூலம் இதனை சபாநாயகருக்கு அறிவித்துள்ளனர்.

குறித்த கடிதத்தில், நாடாளுமன்ற நடவடிக்கைகள், அரசியல் அமைப்பு, நிலையியல் கட்டளை மற்றும் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இலங்கையை கடன் பொறிக்குள் வீழ்த்தும் எண்ணம் எமக்கில்லை

### சீனத் தூதரக பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)


இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான தொடர்பு பரஸ்பர நல்லுறவேயன்றி, இலங்கையை கடன் பொறிக்குள் வீழ்த்தும் எண்ணம் சீனாவிற்கு இல்லை என பிரித்தானியாவிலுள்ள சீனத்தூதரகத்தின் பேச்சாளர் ஸெங் ரொங்க் தெரிவித்துள்ளார்.

இலங்கையை கடன்பொறிக்குள் சிக்க வைப்பதன் ஊடாக அங்கு அரசியல்சார் தளம்பல் நிலையினை ஏற்படுத்துவதற்கு சீனா முயற்சிப்பதாகக் கூறப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலாகவே அவர் மேற்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.

மேலும் பிராந்திய நாடுகளுக்கிடையில் ஆதிக்கம் செலுத்தும் நோக்கில் சீனா எந்தவொரு நாட்டுடனும் போட்டியிடவில்லை எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

## மாவீரர் நாள் நிகழ்வை ஏற்பாடு செய்தவரின் வீட்டின்மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல்





(கரணவாய்)

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களின் வீட்டின் மீது இனந்தெரியாதவர்களால் நேற்று அதிகாலை 2 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அப் பகுதியிலுள்ள புஸ்பமலர் என்பவரது வீட்டின் கண்ணாடிகளே அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

தனது இரண்டு வயது பேரனுடன் தனிமையில் இருந்த நிலையிலேயே புஸ்பமலரது வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட வேளை தாம் வெளியே ஓடி தப்ப முற்பட்டபோதும் அது முடியாமல் போக தானும் தனது பேரனுமாக அறையை பூட்டி பாதுகாப்பாக பதுங்கி இருந்ததாகவும் இதனாலேயே தாம் தப்பிக்க முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தமது கிராமத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் மேற்கொள்ள தனது மகன் உட்பட பல கிராமத்தவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது அவ்விடத்திற்கு வந்த பருத்தித்துறை பொலிஸார் தனது மகனான ஜெ.தர்சன் என்பவரை கைது செய்து வாகனத்தில் ஏற்றியதாகவும் அவரை கொண்டு செல்ல முற்பட்டபோது ஏற்பாட்டாளர்கள் மற்றும் உறவினர்கள் பொலிஸாரை தடுத்து அவரை மீட்டதாகவும் அந்த பின்னணியிலேயே தமது வீடு தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் பொலிஸார் வீட்டிற்கு வந்து விசாரணைகள் மேற்கொண்டதாகவும் தாக்குதல் தொடர்பில் யாழ்ப்பாணம் மனித உரிமைகள்ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதே வேளை மாவீரர் நாளை அனுஷ்டித்த ஏற்பாட்டாளர்களை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்ய்ப் போவதாக கடுமையாக அச்சுறுத்தி வருவதாகவும் சுப்பர் மடம் மக்கள் மேலும் தெரிவித்தனர். (இ-60)

## அரசாங்கத்தை கவிழ்ப்பது எமது செயற்பாடு இல்லை!

### வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

இலங்கை மருத்துவச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய தலைவர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய தலைவர் மருத்துவச் சபையில்சுயாதீனமாகச் செயற்படுவார் என நம்புவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் நளிந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த வைத்தியர் நவீன் திஸாநாயக்க, அரசாங்கத்தை கவிழ்ப்பது அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயற்பாடு இல்லை எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## அலி ரொஷானின் வழக்கு டிசெம்பர் 5 விசாரணைக்கு

(கொழும்பு)

சட்டவிரோதமாக யானை கடத்தலில் ஈடுபடுகின்ற அலி ரொஷான் என அறியப்படும் நிராஜ் ரொஷான் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் என்று கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இதன்போது வழக்கு தொடர்பான ஆவணங்களைப் பிரதிவாதிகளுக்கு வழங்குவதற்குக் காலம் தேவை என்று அரசதரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

அதேநேரம் மேலும் ஏழு சாட்சியாளர்களை புதிதாக வழக்கில்இணைத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறும் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அதற்கு அனுமதி வழங்கிய நீதிமன்றம் ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்புக்கு வழங்கப்பட்டுள்ளதா என்று பரிசீலிப்பதற்காக வழக்கை டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்டது. (இ-7)

## 5ஆயிரத்து 800 மில்லியன் அமெரிக்க டொலர் அடுத்த ஆண்டு கடனாகச் செலுத்த வேண்டும்

### ஜே.வி.பி. எம்.பி. சுனில் தகவல்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு மாத்திரம் 5 ஆயிரத்து 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, ராஜபக்ஷ- மைத்திரி கூட்டணிக்கு அதிகாரம் மட்டுமே தேவைப்படுகின்றது.

மாறாக அவர்களுக்கு நாட்டினையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை எனவும் சுட்டிக் காட்டினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரசாங்கம் ஒன்று இல்லாத நிலைமையில் நாட்டின் பொருளாதாரம் பாரிய அளவில் வீழ்ச்சி கண்டு வருகின்றது. நவம்பர் மாதம் என்பது இலங்கையின் சுற்றுலாத்துறை பலமடையும் மாதமாகும்.

ஆனால் இன்று நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. அதுமட்டுமல்ல வழமையாக நவம்பர் மாதம் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கப்பட வேண்டும்

ஆனால்இன்றுவரை பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை. அந்தளவு மோசமான நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE

## WALK-IN INTERVIEW

Walk –in Interview for the post of Temporary Demonstrator will be held on 12.12. 2018 at 2.30 p.m at the Board room of the Faculty of Medicine, University of Jaffna.

**Temporary Demonstrator**
**in**
**Nursing/Pharmacy/Medical Laboratory Sciences**

**Qualifications:-**
A Degree in the relevant subject.

**Note-** Candidates who are awaiting for the results of the final examinations are expected to attend the interview.

**SALARY SCALE**–Rs.33,100/=p.m (fixed)

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, National Identity Card and **self-prepared applications.**

**Registrar,**
**University of Jaffna.**
**26.11.2018**

(C-4533)



# மரண அறிவித்தல்



பிறப்பு
04 - 01 - 1929

இறப்பு
27 - 11 - 2018

## கிங்சிலி இம்மானுவேல் பெனடிக்ற்

கரம்பனை வசிப்பிடமாகக் கொண்ட கிங்சிலி இம்மானுவேல் பெனடிக்ற் 27.11.2018 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை யோசவ் பெனடிக்ற் - சிசிலியா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அக்னஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற காமல் புஸ்பாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றெஜினா, காலஞ்சென்ற மேரி, அன்ரன் அலோசியஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் துஷித்தா (லண்டன்), துஷான் (லண்டன்), துஜீவ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.11.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கரம்பன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4535)

புனித செபஸ்தியார் கோவிலடி,
கரம்பன்.

தகவல்:
குடும்பத்தினர்


# ரெபன், லெவண்டஸ்கி அபாரம் பேயர்ன் மியூனிச் உற்சாகம்



கோலடித்த உற்சாகத்தில் லெவெண்டஸ்கி

பென்பிகா அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் ராபெென், லெவான் டோஸ்கி தலா இரண்டு கோல் அடிக்க பேயர்ன் முனிச் அணி 5–1 என வெற்றி பெற்றது.

ஐரோப்பா வில் சம்பியன்ஸ் லீக் கால் பந்து தொடர் நடக்கிறது. ஜேர்மனியின் முனிச் நகரில் நடந்த 'இ' பிரிவு லீக் போட்டியில் பென்பிகா, பேயர்ன் முனிச் அணிகள் மோதின. ஆ ர ம் ப ம் முதலே பேயர்ன் மியு னிச் அணியினர் அசத்தினர். ராபென் (13, 30ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித்து அசத்தினார்.

தன் பங்கிற்கு லெவான்டோஸ்கி (36, 51) இரண்டு கோல் அடிக்க, பேயர்ன் அணி வலுப்பெற்றது. தன் பங்கிற்கு ரிபெரி (76) கைகொடுக்க, எதிரணி வீரர்கள் திணறினர். பென் பிகா சார்பில் பெர்னாண்டஸ் (46) மட்டும் ஆறு தல் கொடுத் தார்.

முடிவில், பேயர்ன் மியு னிச் அணி 5-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

◈ இத்தாலியில் நடந்த 'எச்' பிரிவு லீக் போட்டியில் யுவன்டஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வலன் சியா அணியை தோற்கடித்தது.

# பரிசளிப்பு விழா

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30மணிக்குநீராவியடியில்அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் கல்லூரி அதிபர் நா.மகேந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தயாசிவம் கோபிசங்கர் கலந்து கொள்வதோடு பரிசில்களை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி நிலானி கோபிசங்கர் வழங்கவுள்ளார். (3)


# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2019

27.10.2018ம் திகதிய தினக்குரல், உதயன் பத்திரிகைகளில் கேள்வி அறிவித்தல் பிரசுரித்ததற்கமைய குத்தகைக்கு வழங்கப்படாத கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2019ஆம் ஆண்டிற்கு (01.01.2019 - 31.12.2019) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 30.11.2018 - 11.12.2018 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 12.12.2018 பி.ப 02.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 12.12.2018 பி..ப 02.00 மணி

மீள் கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடிதஉறையில் இடதுபக்கமேல் மூலையில் "சந்தை, இறைச்சிக்கடை குத்தகை மீள் கேள்வி - 2019" என எழுதி மூலப்பிரதியை **"செயலாளர், வலிகிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை" பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் எதிர்வரும் **12.12.2018**ஆம் திகதி பி.ப 02.00 மணிக்குமுன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் மீள் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. கேள்விப்பத்திரங்கள், நிபந்தனைகளை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலிபொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 500 | 25.000.00 | 9.547,650.00 | |
| 2 | அக்கரைகடற்கரை - வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடல் | 500 | 2000.00 | 61,400.00 | 500 |
| 3 | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500 | 3000.00 | 282,150.00 | |
| 4 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 500 | 2000.00 | 84,150.00 | 250.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 1 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 500 | 10,000.00 | 958,800.00 | 500 |
| 2 | புத்தூர் பொதுச்சந்தை | 500 | 3000.00 | 346,500.00 | |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 1 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500 | 3000.00 | 531,600.00 | 500 |
| 2 | உரும்பிராய் கோழியிறைச்சிக்கடை | 500 | 3000.00 | 437,600.00 | 500 |

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர், வலிகிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2018.11.29**

(C-4532)

# ஜனாதிபதி மைத்திரி 100 வீதம் ஜனநாயகத்தை மீறிவிட்டார்

## ஜே.வி.பி.எம்.பி.பிமல் சுட்டிக்காட்டு



(கொழும்பு)
ஜனாதிபதி அமைத்த இடைக்கால அரசாங்கத்தை எந்தவொரு சர்வதேச நாடும் ஏற்றுக்கொள்ள வில்லை.

இதுவே ஜனாதிபதியின் ஆட்சியின் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அசுமாரசிங்க கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்

வழமையாக ஆட்சியிலுள்ள அரசாங்கம் மக்கள் ஆணையை முழுமையாக மதிக்காமலே செயற்படும்.

60 வீதமேனும் சர்வாதிகாரப் போக்கில் தான் அரசாங்கம் செயற்படும். ஆனால் இன்று ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் நூறு வீதம் ஜனநாயகத்தை மீறி விட்டனர். மக்கள் ஆணையை முழுமையாக மீறி சர்வாதிகார ஆட்சியை தக்கவைத்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதியைக் கொல்லச்சதி

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக விசாரணை





(கொழும்பு)
பொலிஸூக்குத் தகவல் வழங்குநராக செயற்படுவதாக கூறப்படும் நாமல் குமார என்பவருக்கு பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையைப் பெற்றுக் கொடுத்த மறுகணமே அதனை மீளப் பெற்ற பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, எதிர்காலத்தில் எல்லாச் செயற்பாடுகளையும் நிறுத்தும்படி உத்தரவிட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை நடத்தவுள்ளது.

எதிர்வரும் நாட்களில் இது தொடர்பான விசாரணைகள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. நாமல் குமாரவால் குற்ற விசாரணைத் திணைக்களத்திற்கு கொலை முயற்சி தொடர்பாக அளிக்கப்பட்ட முறைப்பாட்டில், குறிப்பிட்டுள்ளபடி முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவுடன் நாமல் குமார அந்த ஐந்து இலட்சம் ரூபா பணப்பரிசைப் பெற, பொலிஸ் தலைமையகத்துக்கு கடந்த செப்டெம்பர் மாதத்தில் சென்றுள்ளார்.

அச்சந்தர்ப்பத்தில் பொலிஸ் நிலையத்தில் மேலும் பல அதிகாரிகள் புகைப்படம் எடுப்பதற்கு வந்திருந்தோர் முன்னிலையில், பொலிஸ்மா அதிபரால் குறிப்பிட்ட காசோலை நாமல் குமாரவுக்கு வழங்கப்பட்ட மீண்டும் பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் அனைத்துச் செயற்பாடுகளையும் உடனடியாக நிறுத்தும்படி கூறியுள்ளார்.

நாமல் குமார குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அது பற்றிக் கூறும் போது தான் கொலை சூழ்ச்சித் திட்டத்தை வெளியிடத்யாராகவுள்ளதாகப் பொலிஸ் மாஅதிபர் தகவல்களை அறிந்துகொண்டு இனிமேல் எதுவும் செய்ய வேண்டாமெனப் எச்சரித்ததாகக் கூறினார். பொலிஸ்மா அதிபரின் இந்த மிரட்டல், நாமல் குமாரவைப் பெரும் சங்கடத்துக்கு உள்ளாக்கியதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அது மாத்திரமல்ல அந்தக் காசோலை நாமல் குமாரவின் பெயருக்கல்ல, நாலகடி சில்வாவின் பெயருக்கே எழுதியிருந்ததாகக் கூறப்பட்டது. நாமல்குமார குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கூறியுள்ள விடயங்களுடன் இந்தக் கொலை சூழ்ச்சியில் அரசியல்வாதிகள் இருவருக்கும் அரசாங்க அதிகாரிகள் இருவருக்கும் தொடர்புள்ளதெனக் கூறப்பட்டுள்ளது.

அதைத்தவிர, சூழ்ச்சியில் தொடர்பு இல்லையென்றாலும் இந்த சூழ்ச்சி தொடர்பாக இன்னோர் அரசியல் வாதியும் அறிந்திருந்ததாகக் கூறப்பட்டிருந்தது. அந்த சூழ்ச்சியை செயற்படுத்தும் விதம் குறித்த திட்டமும் ஆலோசனைகளும் அடங்கிய கடிதம் தனக்குக் கிடைக்காவிட்டாலும் அது தொடர்பான தகவல் தனது தொலைபேசியில் அழிந்து போன பகுதியில் உள்ளதாகக் கூறியதனால் தற்போது அந்தத் தொலைபேசி ஆய்வுக்காக வெளிநாடொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, நாமல்குமாரவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இதுவரை வெளியிடாத நபரொருவர் பற்றிய தகவல்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி அம்பாறை மகாஓயா நகரில் தெரிவிப்பதற்கு எதிர்பார்த்திருக்கின்றார். சம்பந்தப்பட்ட அரச அதிகாரியான அந்த நபர், இன்னும் அந்தப் பதவியில் உள்ளதாகக் கூறப்படுகின்றது. அன்று முற்பகல் 10 மணிக்கு மகாஓயாவில் அந்தத் தகவல்களை வெளியிடவுள்ளதாகவும் அச்சந்தர்ப்பத்தில் தனக்குப் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கும்படியும் கேட்டுள்ளார். (இ-7)

# புதிய அரசியல் யாப்பை தடுக்கவே ஆட்சிக்கலைப்பு

## துரைராஜசிங்கம் சந்தேகம்



(ஈறாவூர்)
நாட்டில் புதிய அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அதன்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் கலந்தாலோசிக்கப்பட்டது. இதற்குப் பெரும்பான்மை சமூகத்திடமிருந்து எதிர்ப்பு வரலாம் என்று கருதியே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்தாரா? என்ற சந்தேகம் எழுவதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்தச் செயற்பாடு அரசியலமைப்பிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதற்கு ஜனாதிபதி மைத்திரி பொறுப்புக்கூற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், நல்லாட்சிக்கு முன்னைய ஆட்சிக்காலத்துடன் ஒப்பிடுகையில், நல்லாட்சியில் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை என குறிப்பிடத்தக்க நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதென குறிப்பிட்ட துரைராஜசிங்கம், எதுவுமே நடைபெறவில்லையெனக் கூற முடியாதென்றும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் 18 சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தி மகிந்த எந்தவொரு தீர்வுக்கும் வராது பேச்சுவார்த்தைகளைத் தள்ளிப்போட்டுக் கொண்டே இருந்தார். காணாமல் போனவர்கள் தொடர்பில் எந்தவித அக்கறையும் செலுத்தவில்லை. ஐ.நா. தீர்மானத்திற்கு முரண்பட்ட விடயங்களையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த விடயங்களையும் 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் இவை தொடர்பாக ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில், மக்கள் ஆணை வழங்கிய நல்லாட்சியைத் தொடர்ந்து கொண்டு செல்வது ஜனாதிபதியின் கடமையென்றும், அதனை மீறி செயற்பட்டமை அரசியல் சாசனத்திற்கும் மக்கள் ஆணைக்கும் முரணானதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பழுதடைந்த மீன்கள் பறிமுதல்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி மீன்சந்தையில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை பழுதடைந்த மீன்கள் நேற்றுப் புதன்கிழமை காலை நகரசபையின் சுகாதாரப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

முதல்நாள் மிஞ்சிய மீன்களை றெஜிபோர்ம் பெட்டியில் வைத்து பாதுகாத்து அடுத்த நாள் காலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த போதே சுகாதாரப் பரிசோதகரால் பாவனைக்கு உகந்ததல்ல என பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

4 றெஜிபோர்ம் பெட்டிகளில் அடைத்த சுமார் 25 கிலோகிராம் மீன்களே இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (இ-30)

## இராசி பலன்

29.11.2018
கார்த்திகை 13, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
சப்தமி முன்னிரவு 10.06 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 10.19 மணிவரை
சுபநேரம் 7.43-9.13 மணிவரை
இராகுகாலம் 1.43-3.13 மணிவரை
சித்தாமிர்தம்

கிரகநிலை: செவ், ராகு. சந், கேது, சனி, குரு. சூரி, புத. சுக்
சந்திராஷ்டமம் திருவோணம் காலை 10.10 மணிக்கு சிங்கம்-சந்

வளவன்

**மேடம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி கைகூடும், பிள்ளைகள் குடும்பப் பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கடகம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி:** பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், சேமிப்புகள் உயரும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு:** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாடு ஆனந்தம் தரும், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மீனம்:** தேகநலனில் இருந்த பாதிப்புகள் அகலும், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

## கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தளபாடங்கள் பொலிஸாரால் தடுத்து வைப்பு!

(சாவகச்சேரி)

கிளிநொச்சி பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மகேந்திரா வாகனத்தில் அனுமதியின்றிக் கொண்டுவரப்பட்ட தளபாடங்கள் சாவகச்சேரி பொலிஸாரால் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மதியம் யாழ்.நோக்கி வந்த மகேந்திரா வாகனத்தை சாவகச்சேரிப் பகுதியில் மறித்துச் சோதனையிட்ட பொலிஸார் அதற்குள் அனுமதி இன்றி கொண்டு வரப்பட்ட 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரத்தில் செய்த ஜன்னல்,கதவு நிலைகள் உள்ளிட்ட தளபாடங்களை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வாகனத்துடன் தடுத்து வைத்துள்ளனர்.

வாகனச் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கைது நடவடிக்கையை உப பொலிஸ் பரிசோதகர் ஜெயரோசன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்துள்ளனர். (இ-30)

## சப்பச்சி மாவடி வீதியை உடன் புனரமையுங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 6 ஆம் வட்டாரத்திலுள்ள சப்பச்சி மாவடி வீதி உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுவதாக சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சப்பச்சி மாவடி வீதி ஆபத்தான நிலையில் குண்டும் குழியுமாக வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகிறது. குறித்த வீதி தற்காலிகமாக அவசர நிலைமை கருதி உடனடியாகச் செப்பனிட வேண்டியுள்ளது. குறித்த வீதியை தினமும் பாடசாலை மாணவர்கள் உட்பட இருநூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். கச்சாய், அல்லாரைப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குப் பயணிக்கும் பாதையாக இது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

## பட்டம் பெறும் மாணவர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு வைபவத்தில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திலிருந்து பட்டம் பெறும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பிரதான மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் புகைப்படம் எடுப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் அதற்குரிய உடையில் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என பழைய மாணவர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ

## "நிஜங்களின் நிழல்கள்-2" ஒளிப்படக் கண்காட்சி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் பேரவையின் அனுசரணையுடன் யாழ்.இந்துக் கல்லூரி ஒளிப்படக்கலைக் கழகம் நடத்தும் "நிஜங்களின் நிழல்கள்-2'' ஒளிப்படக் கண்காட்சி இன்று 29 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் மாலை 4 மணி வரையும் 30 ஆம் திகதியும் முதலாம் திகதியும் காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை உள மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி சி.சிவதாஸ் கலந்து கொள்வார். (இ-5)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்ட எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பயனாளிகளுக்காக "வலுவிழந்தோர் இயல்பு வாழ்வு வாழ வழி வகுப்போம்" எனும் தொனிப்பொருளில் கண்காட்சி ஒன்றை நிறுவக வளாகத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

அத்தோடு மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிப் பயிற்சி இலவசமாக வழங்கப்படவுள்ளது. (இ-5)

## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையத்தின் சர்வதேச மாற்றுத்திறனாளிகளின் தின நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் கருவித் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் ஜே.இருதயராஜ், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை ஊரிக்காடு சிறுகைத்தொழில் முயற்சியாளர் ப.பாலமுருகன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி அதிபர் திருமதி கிறேஸ் தேவதயாளினி தேவராஜா, கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி சிவன் அறக்கட்டளை நிலையஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதம், யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி இன்பத்தேன் மென்பான நிலைய உரிமையாளர் முருகன் றஞ்சன் முத்துக்குமார், கருவி வளவாளர் சு.கணேஸ் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-5)

## இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

இளைஞர்,யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

வாழும் கலை அமைப்பின் ஸ்தாபகர் தவத்திரு ரவிசங்கர் இளைஞர், யுவதிகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டு உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டு 155 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பல அரிய மாற்றங்களை இளைஞர், யுவதிகளிடையே ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு பயிற்சியே இந்த தலைமைத்துவப் பயிற்சியாகும்.

இதில் யோகா, தியானம், பிராணாயாமம், சுதர்சனகிரியா போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. 4 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை தங்கியிருந்து பயிற்சி மேற்கொள்ள வேண்டும். 18 வயது முதல் 35 வயது வரையானோர் இதில் பங்குபற்ற முடியும்.

இதற்கான நேர்முகத் தேர்வு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை சந்நிதியான் ஆசிரமத்தில் நடைபெறவுள்ளது. 077 224 7635, 077 454 1042, 077 187 0580, 077 131 0771, 077 430 1925 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (இ-9)



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சிவத்திரை சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (படங்கள்:-விஜயவாசன்)

## கல்விசார் வேலைத்திட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வட்ட நகர லயன்ஸ் கழகங்கள் பழனுகம-ஜா-எல லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் ஒன்றிணைந்து நடத்தும் 'கல்விசார் வேலைத்திட்டம்' இன்று 29 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் (வலிகாமம் தென்மேற்கு) மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் வலயத் தலைவர் லயன் பி.சஞ்சீவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் கோட்டத்திற்குட்பட்ட 2018 இல் தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படுவர்.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன், முன்னாள் மாவட்ட ஆளுநர் டாக்டர்.லயன் வி.தியாகராஜா, கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் IIS நிறுவன நிர்வாகி லயன் வி.கே. விக்னேஷ் (MJF), வடமாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் ச.சற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

மேற்படி நிகழ்வு முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.துங்கராஜாவின் வழிகாட்டலில் நடைபெறும். (இ-5)

## வாசிப்புமாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா நாளை 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வேலணைப் பிரதேச சபையின் தேவா திறந்தவெளி அரங்கில் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.சுலோச்சனா முருகநேசன், வேலணை உதவிப் பிரதேச செயலர் திருமதி.ச.கி.நி.கமலராஜன், கௌரவ விருந்தினர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.பு.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## நல்லை நகர் நாவலர் பெருமானின் நினைவு வைபவம் நாளை யாழில்

(யாழ்ப்பாணம்)

நல்லை நகர் நாவலர் பெருமானின் நினைவு வைபவம் நாளை 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இதில் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர், தமிழ் ஆய்வாளர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா "நாவலர் வளர்த்த நற்றமிழ்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார். (இ-5)






உலக நீரிழிவு தின நிகழ்வுகள் கடந்த 21 ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் யாழ்.நீரிழிவு கழகத் தலைவர் தி.மைக்கல் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் இ.சுரேந்திரன், யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்திய நிபுணர் ஏ.அரவிந்தன், யாழ்.போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நாவலர் குருபூஜை நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை காலை உப அதிபர் த. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றன. கலாசாலையின் ஆசிரிய பயிலுநர்கள் "நாவலர் ஒரு பன்முகப் பார்வை" என்ற பொருளில் அவரது பணிகள் குறித்துக் கருத்துரைகளை வழங்கினர். விரிவுரையாளர்களான த. ஜானகி, கு. பாலஷண்முகன் ஆகியோரும் உரையாற்றினர்.



கார்த்திகை மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு தென்மராட்சி கொடிகாமம் வடக்கு பகுதியில் இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினர் மரக்கன்றுகளை கடந்த வாரம் நாட்டியிருந்தனர். அத்துடன் கொடிகாமம் வடக்கு பகுதியில் வசிக்கும் 3 குடும்பங்களின் குடிசைகளில் மழையினரால் ஒழுக்கு ஏற்பட்டிருந்தது. குறித்த குடும்பங்களின் கோரிக்கையையடுத்து கூரை விரிப்புகளையும் வழங்கினர். (படம்:-சோபிகா)

# சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் மனநல பரிசோதனை செய்யுங்கள்

## விமல் வீரவன்ச ஆவேசம்



(கொழும்பு)

உலகில் எந்தவொரு சபாநாயகரும் செயற்படாத வகையில் சபாநாயகர் கரு ஜெயசூரிய செயற்பட்டு வருவதாக தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாடாளுமன்றம் என எடுத்தால் ஆளும் மற்றும் எதிரணி என இரண்டு தரப்பினர் இருக்க வேண்டும். ஆனால், சபாநாயகர் கூறுவதற்கு இணங்கப் பார்த்தால் ஆளும் கட்சியோ பிரதமரோ இல்லை.

நாட்டில் இடம் பெற்று வந்த சம்பிரதாயங்கள் அனைத்தையும் சபாநாயகர் கரு ஜெயசூரிய மீறியுள்ளார். இவரை நாம்சபாநாயகராக ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அவருக்கு மனநல பரிசோதனை செய்ய வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இல்லாவிட்டால் சுயாதீனமாக இயங்க வேண்டும். நிலையியற் கட்டளைக்கு புறம்பாகவே செயற்பட்டுள்ளார். இதனாலேயே அமர்வை புறக்கணித்தோம். அவர் மத்தியஸ்தமாக செயற்பட வேண்டும் என்பதையே நாம் மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

உலகில் எந்தவொரு சபாநாயகரும் செயற்படாத வகையில்தான் அவர் செயற்பட்டுள்ளார். ஹன்சாட் அறிக்கையும் திரிபுபடுத்தப்பட்டுள்ளது. இதனை வெளியிடுவதை நிறுத்துமாறும் தற்போது நாம் கோரிக்கை விடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாட்டில் அரசாங்கம் இருக்குமானால் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்

## முன்னாள் பிரதமர் ரணில் சவால்



(கொழும்பு)

நாட்டில்அரசாங்கம் என்று, ஒன்று இருக்குமானால் அது நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவநம்பிக்கை பிரேரணை நிறைவேற்றப்பட்டு அரசாங்கம் கலைக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது அரசாங்கம் என்ற ஒன்று இல்லை. எனினும் அரசாங்கம் எனும் பெயரில் ஒரு குழு செயற்பட்டு வருகின்றது.

அவ்வாறு அரசாங்கம்என்ற ஒன்று இருக்குமானால் அது நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபித்திருக்க வேண்டும்.

ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை தற்போது தங்கள் வசமே உள்ளதாக அவர்தெரிவித்துள்ளார்.(இ-7)

# பிரதமர், அமைச்சர்கள் எவரும் இல்லை-ஹக்கீம்



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பிரதமருக்கும் ஆளும் கட்சிக்கும் எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டு வெற்றிகொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கம் பெரும்பான்மை இழப்பதாக பாராளுமன்றத்தில் சபாநாயகர் மூலமாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே இப்போது அரசாங்கம் ஒன்றும் பிரதமர். அமைச்சர்கள் எவரும் இல்லை. அவ்வாறு இருக்கையில் இன்னமும் ஊடகங்களில் இவர்களை பிரதமர். அமைச்சர்கள் என குறிப்பிடுவது பாராளுமன்ற அங்கீகாரத்தை மீறும்ஜனநாயக விரோத செயற்பாடாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஆசு மாரசிங்க கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின் போது உரையாற்றிய ரவூப் ஹக்கீம் எம்.பி இதனைத்தெரிவித்தார்.(இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சியினர் என்னை அச்சுறுத்த முயற்சி

## கருணா டுவிட்டரில் பதிவு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியினர் தன்னை அச்சுறுத்த முயற்சிப்பதாக முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) குற்றம் சாட்டியுள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவரது டுவிட்டர் பதிவில், சில ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் என்னை பயமுறுத்துகின்றனர் என்று நான் நினைக்கிறேன். பலர் என்னிடம் பேசுவதற்காக குறுந்தகவல் அனுப்பி வைத்துள்ளனர்.

நான் மட்டக்களப்பு கருணா அம்மான். 2004ஆம் ஆண்டுக்கு முன்னர் கருணா அம்மான் என்றால் யார் என ஏனையவர்களிடம் கேளுங்கள் என கருணா பதிவிட்டுள்ளார். (இ-7)

## நான்கு உணவகங்கள் மீது நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நான்கு உணவகங்கள் மீது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சுகாதாரப் பிரிவினரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறித்த நான்கு உணவகங்களிற்கும் ஒரு மாதத்திற்கு முன்னரே சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு நகரசபையின் சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அறிவுறுத்தல் வழங்கப்பட்டு ஒரு மாத காலமாகியும்சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமையால் நான்கு உணவகங்கள்மீதும்வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட உணவு.மருந்து பரிசோதகர் மற்றும் நகர சபையின் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் இணைந்து உணவகங்களைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-30)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. சூ.திலகதீபன்





வலிகாம வலய அதிபர், ஆசிரியர் கௌரவிப்பில் வலய மட்டத்தில் "அதிபர் விருது" பெறும் எமது பாடசாலை அதிபர் திரு. சூ.திலகதீபன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வறுத்தலைவிளான் அ.மி.த.க.பாடசாலை
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
அபிவிருத்திச் சங்கம்.

## கஷ்ட பிரதேசங்களுக்கு மாற்றம் வழங்கப்பட்டு

# கடமைகளைப் பொறுப்பேற்காத ஆசிரியர்களுக்கு கடுமையான நடவடிக்கை

## வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவு

(கண்டாவளை)

கஷ்டப்பட்ட பிரதேசங்களுக்கு மாற்றம் வழங்கப்பட்டு இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்காதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் ' றெஜினோல்ட் கூரே உத்தரவிட்டுள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது அதிபர்களினால் ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய இந்த உத்தரவை அதிபர்கள் மத்தியிலேயே ஆளுநர் செயலாளர் எஸ். சத்தியசீலன் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோருக்கு பணிப்புரை விடுத்தார்.

துணுக்காய் கல்வி வலயத்திற்கு 270 ஆசிரியர்கள் தேவையாக இருக்கின்றது. 31 நிரந்தர அதிபர்கள் இல்லாத பாடசாலைகள் இயங்குகின்றன. இங்கு 8ஆயிரத்து 202 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என வலயக்கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் ஆளுநரிடம் தெரிவித்தார்.


இந்த நிலையில் கல்வி அமைச்சினால் கடந்தாண்டு 36 ஆசிரியர்களுக்கு துணுக்காய் கல்வி வலயத்திற்கு மாற்றம் வழங்கப்பட்ட போதும் 6 பேர் மட்டுமே கடமைகளை பொறுப்பேற்றிருந்தனர்.

எஞ்சியவர்கள் கடமைகளை பொறுப்பேற்காது இருக்கின்றனர். இவர்கள் கடமைகளை பொறுப்பேற்காததன் காரணத்தினையும் இதற்காக உயர் அதிகாரிகள் அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பது தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இதன் போது பணித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே நேற்று முற்பகல் கிளிநொச்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களை சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.யோன்ஸ் குயின்ரஸ் தலைமையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கஷ்டப்பட்ட பகுதிகளிலிருந்து 2019ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றம் செல்லும் ஆசிரியர்களுக்கு பதிலாக ஆசிரியர்கள் கடமைகளை பொறுப்பேற்காத வரையில் அவர்களை பாடசாலைகளிலிருந்து விடுவிக்க வேண்டாம் என்ற கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கஷ்டப்பகுதி பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் உடனடியாக மாற்றம் பெற்று செல்கின்றபோதும் யாழ்.வலயம் போன்ற வசதிகள் உடைய பாடசாலைகளிலிருந்து கஷ்டப்பகுதிக்கு ஆசிரியர்கள் செல்வது தாமதம் ஆவதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு உங்களது பாடசாலையிலிருந்து ஒரு ஆசிரியர் மாற்றம் பெற்றால் அந்த இடத்திற்கு ஒரு ஆசிரியர் வரும் வரையில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியரை விடுவிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.



இதற்கு மேலதிகாரிகளோ அரசியல்வாதிகளோ அழுத்தம் பிரயோகித்தால் அது தொடர்பில் தம்மிடம் முறையிடுமாறும் அவர் அதிபர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் பாடசாலை ஆசிரியர்களுக்கான விடுமுறைகளை வழங்கும்போது அவர்களுக்கான பதில் கடமையாற்றும் ஆசிரியர்களின் கைப்பட சம்மதக் கடிதங்களை வழங்க வேண்டும் என வலியுறுத்திய ஆளுநர் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் ஆசியர்களுக்கான விடுமுறை காலத்தினை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுவதாக விமர்சனங்கள் எழும் நிலையில் கடந்த ஆறு மாத காலப்பகுதியினுள் 450க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வெளிநாடு மற்றும் பல்வேறு காரணங்களுக்காக தம்மிடம் விடுமுறை அனுமதி பெற்றிருப்பது கவலை அளிப்பதாக தெரிவித்தார். இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை மிகவும் பாதிக்கப்படுகின்றது.

பதில் கடமை நிறைவேற்றும் அதிபர்களாக செயற்படும் அதிபர்களுக்கு அனுகூலங்களை ஏற்படுத்தக் கூடிய வகையிலான திட்டங்களை தயாரிப்பதற்காக வடமாகாணத்தில் பதில் கடமை நிறைவேற்றும் அதிபர்களின் கல்வி தகைமை, சேவைக்காலம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய பட்டியலினை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டங்களின் ஆளுநரின் செயலர் எல். இளங்கோவன், உதவிச் செயலர் ஏ.எக்ஸ்.செல்வநாயகம், மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார், கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)




# 229 மனித எலும்புக்கூடுகள் புதைகுழியில் இருந்து மீட்பு

## சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து தற்போது வரை 235 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 229 மனித எலும்புக்கூடுகள் புதை குழியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக அகழ்வு பணிகள் தொடர்பில் பணிக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் நேற்று புதன்கிழமை 106 ஆவது நாளாக இடம் பெற்றது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

106 ஆவது நாளாக அகழ்வு பணிகள் இடம் பெற்று வருகின்றது. கடந்த இரண்டு வாரங்களாக அகழ்வு பணிகள் இடை நிறுத்தப்பட்டிருந்த நிலையில்,நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மீண்டும் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த அகழ்வு பணிகளின் போது தற்போது வரை 235 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு; அவற்றில் 229 மனித எலும்புக்கூடுகள் புதை குழியில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியை பெற்று நேற்றுமுன்தினம் இங்கு வருகை தந்து அகழ்வு பணிகளை நேரடியாக பார்வையிட்டுச் சென்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (2-285)

# வவுனியா நகரசபை அமர்வில் உயிர்நீத்த மக்களுக்கு அஞ்சலி

(பனிக்கன்குளம்)



வவுனியா நகரசபையின் 8ஆவது அமர்வு நேற்று காலை 9.30மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் சபை அமர்வின் இடையில் நகரசபை உறுப்பினர் திருமதி லக்ஸ்சனா நாகராஜன் மாவீரர் தின நிகழ்வு அனுஷ்டிப்பதற்கு நகரசபை தலைவரிடம் அனுமதி கோரினார். இந்நிலையில் இதற்கு சபையிலிருந்த இரண்டு பெரும்பான்மை இன உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் மாவீரர் தின நிகழ்வு என்ற பெயரில் இடம் பெறுவதற்கு தமது ஆட்சேபனையும் வெளியிட்டதுடன் யுத்தத்தில் உயிரிழந்த அனைத்து மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தமது விருப்பத்தை தெரிவித்தனர்.

இந்நிலையில் நகரசபைத்தலைவர் இ. கௌதமன் கடந்த 35வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின்போது உயிரிழந்த தமிழ்,சிங்கள,முஸ்லிம் ஆகிய மூவின மக்களுக்கு அஞ்சலி நிகழ்வாக நடத்துவதற்கு அனுமதி வழங்கினார்.

இதை சபை நிறைவுற்ற பின்னர் நடத்துவதாக தெரிவித்தார். பிற்பகல் 12.45 மணியளவில் சபை முடிவடைந்த பின்னர் மின் குமிழ்கள் அணைக்கப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் கையில் மெழுகுவர்த்தி ஏந்தியவாறு யுத்தத்தின் போது உயிரிழந்த மூவின மக்களுக்கும் தமது அஞ்சலி நிகழ்வை செலுத்தினார்கள். (2-281)

# கரைச்சி பிரதேசசபை அமர்வில் கருத்து முரண்பாடு;பொலிஸார் வரவழைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் விசேட அமர்வு காலை 9.15 மணிக்கு ஆரம்பமாகியது. இதன்போது தவிசாளர் மற்றும் சுயேட்சைக் குழு உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாடு காரணமாக சபை இரண்டு தடவை ஒத்தி வைக்கப்பட்டது.

இதன்போது தவிசாளர் சபை உறுப்பினரை வெளியேறுமாறு தெரிவித்ததாகவும், தான் வெளியேற முடியாது என தெரிவித்தபோது, சில உறுப்பினர்கள் பொலிஸாருடன் உரையாடினர்.

பொலிஸார் முறையற்ற விதத்தில் சபை மண்டபத்தில் அமர்ந்திருந்தமையை எதிர்த்த சில சபை உறுப்பினர்களின் எதிர்ப்பை அடுத்து, பொலிஸார் வெளியேறினர். சபை மண்டபத்திலிருந்து வெளியேறி மண்டபத்திற்கு வெளியே பொலிஸார் கடமையில் இருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் குறிப்பிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலி கிதனிடம் வினவியபோது,

இன்றைய (நேற்றைய) விசேட அமர்வில் இரண்டு முக்கிய விடயங்கள் பேசப்பட்டதாகவும் அதற்கு மாறான சில விடயங்களை பேசிய போதே குறித்த சம்பவம் இடம் பெற்றதாகவும் தெரிவித்தார்.

அதன் பின்னரே செயலாளரின் அதிகாரத்திற்கமைய பொலிஸார் அழைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இருப்பினும் இன்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டு முக்கிய விடயங் களும் கலந்துரையாடப்பட்டு ஆராயப்பட்டு சுமுகமாக நிறைவேறியதாகவும் அவர் இதன்போர்து தெரிவித்தார். (2-312-315)

# பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி

(பரந்தன்)




பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு தெரிவித்து கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த பேரணி நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி காக்கா கடை சந்தியிலிருந்து ஆரம்பித்து ஏ-9 வீதி ஊடாக கிளிநொச்சி பேருந்து நிலையம்வரை சென்றது.

இதன்போது பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறும், ரணிலை வெளியேறுமாறும் ஆர்ப்பாட்டகாரர்கள் கோஷம் எழுப்பினர்.

குறித்த பேரணியில் வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் தர்மபால செனவிரத்தின உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் தர்மபால செனவிரத்தின உள்ளிட்டோர், பாராளுமன்ற தேர்தலை நடத்துமாறு தெரிவித்தும், கரு ஜெயசூரியவின் செயற்பாடுகளை கண்டித்தும் கருத்துக்களை தெரிவித்தனர். (2-315-312)

# உங்கள் திருமுகம் காட்டி மறுபடி உறங்குங்கள்

## விழிநீர் மழையில் நனைந்தது துயிலுமில்லங்கள்


பண்டிவிரிச்சான்


இரணைப்பாலை


வவுனியா நகர சபை

முல்லைத்தீவு-பச்சைப்புல்மோட்டை


(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)


அளம்பில்


கனகபுரம்


முள்ளிவாய்க்கால்


தேராவில்


ஆலங்குளம்


முல்லைத்தீவு கடற்கரை


முள்ளியவளை

# தமிழர் தாயகமெங்கும்




கோப்பாய்



நாவாந்துறை




கொடிகாமம்



யாழ்.பல்கலை



சுப்பர் மடம்



கிழக்குப் பல்கலை




திருகோணமலை

# மாவீரர் நாள் அனுஷ்டிப்பு



மட்டு. மாவடி



தீருவில்



சாட்டி



லண்டன்



உடுத்துறை



அம்பாறை



கம்பர்மலை சந்தை



மட்டு.தாண்டியடி



மட்டு.தரவை




# 7 தமிழர் விடுதலையில் மத்திய அரசு மோசடி; மன்னிக்க முடியாத மனித உரிமை மீறலாகும்

## ராமதாஸ் காட்டம்


▲ முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்
▲ நளினி ▲ ரவிச்சந்திரன் ▲ ராபர்ட் பயஸ் ▲ ஜெயகுமார்



(சென்னை)

7 தமிழர் விடுதலையில் மத்திய அரசு மோசடி செய்துள்ளதாக, பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக ராமதாஸ் நேற்று புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "பேரறிவாளன், முருகன் உள்ளிட்ட 7 தமிழர்கள் விடுதலை குறித்த விவகாரத்தில், உரிய விதிகள் வகுக்கப்படாத நிலையில், இல்லாத விதிகளைக் காரணம் காட்டி அவர்களின் விடுதலைக்கு மத்திய அரசு முட்டுக்கட்டை போட்டு வந்தது அம்பலமாகியிருக்கிறது. எந்த அடிப்படையுமே இல்லாமல் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக எழுவர் விடுதலையை மத்திய அரசு தாமதப்படுத்தியது கண்டிக்கத்தக்கது.

7 தமிழர்களை விடுதலை செய்ய அனுமதிக்க முடியாது என்று மத்திய உள்துறை அமைச்சகம் கூறிவிட்டது. அதுமட்டுமின்றி, 7 தமிழர் விடுதலைக்கு குடியரசுத் தலைவர் அனுமதி மறுத்து விட்டதாகவும் செய்திகள் பரப்பப்பட்டன. அதன் தொடர்ச்சியாகத்தான் அரசியலமைப்புச் சட்டத்தின் 161 ஆவது பிரிவின் 7 தமிழர்களை மாநில அரசே விடுதலை செய்யலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதன்படி 7 தமிழர்கள் விடுதலை குறித்து தமிழக ஆளுநருக்கு மாநில அமைச்சரவை பரிந்துரை செய்துள்ளது. அமைச்சரவையின் பரிந்துரை கடந்த 81 நாட்களாக ஆளுநர் புரோஹித்தின் பரிசீலனையில் உள்ளது.

இத்தகைய சூழலில் தான் 7 தமிழர் விடுதலை விவகாரத்தில் மத்திய அரசு நடத்திய மோசடியான நாடகங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன. 08.01.2016 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி பேரறிவாளன் வினவிய கேள்விகளுக்கு மத்திய உள்துறை இப்போது அளித்துள்ள பதில்கள் தான் நாடகங்களை அம்பலப்படுத்தியுள்ளன. மத்திய உள்துறை அளித்துள்ள பதிலில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 432-435 பிரிவுகளின் கீழ் தண்டனைக் குறைப்பு செய்வது குறித்து மத்திய அரசு இதுவரை எந்த விதிகளையும் வகுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களும் விடுதலை ஆகி விடக் கூடாது என்ற எண்ணத்தில் தான், விதிகளே இல்லாத சூழலில் தாங்கள் விருப்பப்படி அது குறித்த கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

அதன் மூலம் 7 தமிழர்கள் விடுதலையை மத்திய அரசு இரு ஆண்டுகள் தாமதப்படுத்தியுள்ளது. மத்திய அரசின் இந்த நடவடிக்கை மன்னிக்க முடியாத மனித உரிமை மீறல் ஆகும்.

அதுமட்டுமின்றி, இது உச்ச நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலும் ஆகும். 28 ஆண்டுகளாக சிறையில் வாடும் எழுவரை விடுதலை செய்ய அற்புதமான வாய்ப்பு கிடைத்த நிலையில், மத்திய அரசு சொந்த வெறுப்பு காரணமாக அவர்களின் விடுதலைக்கு எதிராக முடிவெடுத்து சதி செய்திருக்கிறது. இதனால் 7 தமிழர்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் இழப்புகளை மத்திய அரசு ஈடு செய்ய வேண்டும்.

இது ஒருபுறமிருக்க 7 தமிழர்கள் விடுதலை தொடர்பாக தமிழக அமைச்சரவை பரிந்துரை செய்து இன்றுடன் 81 நாட்கள் ஆகும் நிலையில் அதன் மீது முடிவெடுக்காமல் ஆளுநர் தாமதம் செய்வதும் மனித உரிமை மீறலாகும்.

7 தமிழர்கள் விடுதலையை தாமதம் செய்ய எந்த நியாயமான காரணங்களும் இல்லை. எனவே, இனியும் தாமதிக்காமல் 7 தமிழரையும் விடுவித்து ஆளுநர் ஆணையிட வேண்டும்" என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். (4-7)

# சீனாவில் இரசாயன

# குண்டு வெடிப்பு; 22

## -பலர் படுகாயம்-



(பீஜிங்)

சீனாவில் இரசாயன தொழிற்சாலை அருகே நடந்த குண்டுவெடிப்பில் 22 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

வடக்கு சீனாவின் ஹிபேய் மாகாணத்தின் ஜாங்க்ஜியாகோவ் நகரில் இரசாயன தொழிற்சாலை உள்ளது. இதன் அருகே தொழிற்சாலைகக்கு சரக்கு ஏற்றி வரும் லொறிகள் மற்றும் ஊழியர்களின் கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்த பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

இதன் காரணமாக வாகனங்கள் தூக்கி வீசப்பட்டு தீப்பற்றி எரிந்தன. அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து கடுமையாகப் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த குண்டுவெடிப்பில் 38

# பங்களாதேஷி

# கலிதா தேர்தலி

## டாக்கா உயர் நீதி



(டாக்கா)

ஊழல் வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா டிசெம்பர் 30 ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் போட்டியிட நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பங்களாதேஷ் நாட்டின் பிரதமராக பதவி வகித்த கலிதா ஜியா (வயது-73) ஆட்சிக் காலத்தின் போது அவரது கணவர் மறைந்த ஜியாவுர் ரஹ்மான் பெயரால் இயங்கிவரும் அறக்கட்டளைக்காக வெளிநாடுகளில் இருந்து முறைகேடாக சுமார் இரண்டரை இலட்சம் அமெரிக்க டொலர்கள் நன்கொடை

# ஒரு மாத மழை ஒரே நாளில்

(சிட்னி)



அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய நகரான சிட்னியில் வரலாறு காணாத மழை பெய்து வருகிறது. ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை நேற்று ஒரே நாளில் பெய்ததால், வீதியில் மழை நீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பல்வேறு இடங்களில் மரங்கள் சாய்ந்தன, சுரங்கப்பாதைகளில் மழைநீர் புகுந்ததால், மக்கள் மிகுந்த சிரமப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய நகரான சிட்னியில் நேற்று காலையில் இருந்து கனமழை பெய்து வருகிறது. இடி, மின்னல், காற்றுடன் கனமழை பெய்ததால் மக்கள் வெளியே நடமாட முடியாமல் பெரும் சிரமத் துக்கு ஆளாகி னாரகள். அலுவலகத்துக்குச் செல்பவர்கள், பாடசாலை, கல்லூரிக்குச் சென்றவர்கள் வீடு திரும்ப முடியாமல் பெரும் அவதிக் குள்ளானார்கள்.

மீட்புப் பணியில் ஈடுபட்டு இருந்த பொலிஸார் மீது மரங்கள் முறிந்து விழுந்ததில் இரு பொலிஸார் காயமடைந்தனர், ஒரு பெண் பொலிஸாருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. நேற்றுக் காலையிலிருந்து 12 பேரை மழையிலிருந்து மீட்டுள்ளதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். (4-7)

# பெற்றோலுக்கு பதிலாக மிருகங்களின் கொழுப்பிலிருந்து விமான எரிபொருள்



(லண்டன்)

பெற்றோல் மூலம் விமானங்கள் இயக்கப்பட்டு வரும் நிலையில் மிருகங்களின் கொழுப்பில் இருந்து விமான எரிபொருள் தயாரிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் பெற்றோல் மூலம் இயக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஆண்டுக்கு 2 சதவீதம் காபனீரொட்சைட்டு காற்றில் கலந்து மாசு ஏற்படுகிறது. விமானங்களில் வேறு வகையான எரிபொருள் பயன்படுத்த தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் மாட்டின் கெட்டியான கொழுப்பில் இருந்து எரிபொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்சில் உள்ள ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் இத்தகைய முயற்சியில் வெற்றி பெற்றுள்ளது. அதே போன்று கோழி கொழு ப்பில் இருந்தும் விமானத்துக்கான எரிபொருள் தயாரித்துள்ளது.

இதன்மூலம் எரிபொருள் தயாரிப்புக்கான செலவு குறைவாக உள்ளது. எனவே வருகிற 2035ஆம் ஆண்டில் விமானத்தில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை 2 மடங்காக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (4-7)

# அமெரிக்க கூட்

# 7 தலிபான் பயங்

(காந்தஹார்)

தலிபான் பயங்கரவாதிகளை குறி வைத்து அமெரிக்க கூட்டுப்படைகள் நிகழ்த்திய வான் தாக்குதலில் 7 தலிபான் பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து தலிபான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஒரு பக்கம் அமைதிப் பேச்சுவார்த்தை



# வெளிநாடு

## ...ா தொழிற்சாலையில் ...22 பேர் உயிரிழப்பு



...லொறிகள், 12 கார்கள் தீக்கிரையாகின. வாகனங்களில் இருந்த 22 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 22 பேர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இது குண்டு வெடிப்பா? அல்லது விபத்தா? என்பது குறித்து விசாரணை நடை பெற்று வருகிறது. (4-7)

## ரஷ்யா - உக்ரேய்ன் பிரச்சினையை பேச்சுவார்த்தையால் தீர்க்க வேண்டும்

### –துருக்கி ஜனாதிபதி வலியுறுத்து–

(மொஸ்கோ)

ரஷ்யாவும், உக்ரேய்னும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தமக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என துருக்கி ஜனாதிபதி தையீப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

மேலும், கருங்கடலை சமாதான கடலாக பார்ப்பதற்கு அங்காரா விரும்புவதாகவும் துருக்கி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



உக்ரேய்னில் இராணுவ சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற துருக்கி நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "ரஷ்யாவிற்கும், உக்ரேய்னுக்கும் இடையே பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைகளை தீர்க்குமாறு தொடர்ந்தும் அழைப்பு விடுக்கிறோம்.

அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ ரீதியாக உலகம் தீவிர அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வரும் தருணத்தில், ரஷ்யாவும், உக்ரேய்னும் முரண்பாடுகளை தவிர்த்து இணைந்து செயற்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

உக்ரேய்னில் மூன்று கடற்படைக் கப்பல்களை ரஷ்யா கைப்பற்றியது.

இதனையடுத்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உக்ரேய்னில் 30 நாட்களுக்கு இராணுவ சட்டம் அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...ஷின் முன்னாள் பிரதமர் ...தலில் போட்டியிட முடியாது

### ...நீதிமன்றம் தடை



...பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் கலிதா ஜியா தனது பதவி அதிகாரத்தை பயன்படுத்தி மிகப் பெரிய நிதி மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதுதொடர்பாக, டாக்காவிலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் கலிதா ஜியாவுக்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் ஒரு வழக்கிலும் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அவர் டாக்கா நகரிலுள்ள தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பங்களாதேஷ் பாராளுமன்றத்துக்கு டிசெம்பர் 30 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்ததேர்தலில் போட்டியிட பங்களாதேஷ் தேசியவாத கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமரும் இரு ஊழல் வழக்குகளில் சிறையில் தண்டனை அனுபவித்து வருபவருமான கலிதா ஜியா நீதிமன்றத்தை நாடி இருந்தார்.

இந்த தண்டனைகளை எதிர்த்து மேன் முறையீடு செய்து, வழக்கு நிலுவையில் இருப்பதால் அவரை தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என கலிதாவின் சட்டத்தரணி தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பளித்த டாக்கா உயர் நீதிமன்றம், தண்டனைக்கு எதிராக மேல் முறையீடு செய்யப்பட்டிருந்தாலும் இரண்டாண்டுகளுக்கு அதிகமான காலம் சிறைவாசம் விதிக்கப்பட்ட ஒருவரை தேர்தலில் போட்டியிட அனுமதிக்க முடியாது என்று அறிவித்துவிட்டது. (4-7)

## பீகார் புகையிரத நிலையத்தில் எலும்புகள், மண்டையோடுகள் மீட்பு

(பீகார்)

பீகார் மாநிலம், சப்பாரா ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் 16 மனித மண்டை ஓடுகள், 34 எலும்புகள் கிடந்ததால் பொலிஸார் அதிர்ச்சி அடைந்தனர்.

கிழக்கு சம்பரன் மாவட்டத்தில் உள்ள சப்பாரா புகையிரத நிலையத்தில் வழக்கம் போல் பொலிஸார் நேற்று முன்தினம் ரோந்து சென்றனர். அப்போது ஒரு சாக்கு மூடையில் ஏராளமான மனித மண்டை ஓடுகளும், மனித எலும்புகளும் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து, அந்த எலும்புகளைப் பறிமுதல் செய்து விசாரணை நடத்தியதில், அப்பகுதியைச் சேர்ந்த சஞ்சய் பிரசாத் (வயது-29) என்பவரைக் கைது செய்தனர்.

இதுகுறித்து ரயில்வே பொலிஸ் டி.எஸ்.பி. தன்வீர் அகமது கூறுகையில், "சப்பாரா ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை வழக்கம் போல் ரயில்வே பாதுகாப்புப் படையினர் ரோந்து சென்றனர். அப்போது சந்தேகத்துக்கு இடமான வகையில் ஒரு சாக்கு மூடை இருந்தது.



அந்த மூடையை பொலிஸார் பிரித்துப் பார்த்த போது, அதில் 16 மனித மண்டை ஓடுகளும், 34 மனித எலும்புகளும் இருந்தன. மேலும் பூடான் நாட்டு கரன்சிகளும், பல்வேறு நாடுகளின் ஏடிஎம் கார்டுகள், சிம்கார்டுகள் இருந்தன.

இதையடுத்து அப்பகுதியில் பொலிஸார் விசாரணை நடத்தியபோது, இந்த மூடையை இங்கு வைத்து விட்டுச் சென்ற சஞ்சய் பிரசாத் என்பவரை பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் விசாரணை நடத்தியதில், கிழக்கு சம்பரன் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்தது.

உத்தரப் பிரதேசம் பாலியா நகரில் இருந்து இந்த மனித மண்டை ஓடுகளையும், எலும்புகளையும் கொண்டு வருவதாகவும் மேற்கு வங்கத்தின் ஜல் பைகுரி வழியாக பூடானுக்கு செல்வதாகவும் தெரிவித்தார்.

மாந்திரிக செயல்கள் செய்பவர்களுக்கு மனித எலும்புகளை சப்ளை செய்யும் பணியை பிரசாத் செய்துவந்துள்ளார் என்று சந்தேகிக்கிறோம். விசாரணைக்குப்பின் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவரை விசாரணைக்கு எடுத்து இந்த எலும்புகள் யாருடையது, எங்கிருந்து கொண்டு வந்தார் என்பது குறித்து விசாரிக்க இருக்கிறோம" என மேலும் தெரிவித்தார். (4-7)

## ஸ்டெர்லைட் ஆலை விவகாரம்

### தமிழக அரசு பதிலளிக்க பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவு

(டில்லி)

ஸ்டெர்லைட் வழக்கில் தருண் அகர்வால் குழு அறிக்கை தாக்கல் செய்ததையடுத்து, தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்யும்படி தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டதை எதிர்த்து ஸ்டெர்லைட் நிர்வாகம் டில்லியில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்தது. அந்த மனுவை விசாரித்த தீர்ப்பாயம், நிர்வாக பணிகளை மேற்கொள்ள ஸ்டெர்லைட் நிர் வாகத்துக்கு அனுமதி அளித்தும், ஆலையை ஆய்வு செய்ய மேகாலயா உயர் நீதிமன்றின் முன்னாள் நீதிபதி தருண் அகர்வால் தலைமையில் 3 பேர் கொண்ட குழுவை அமைத்தும் உத்தரவு பிறப்பித்தது.

அத்துடன், ஸ்டெர்லைட் ஆலையால் தூத்துக்குடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்யுமாறும் கூறியது.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு கடந்த செப்டெம்பர் 10 ஆம் திகதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் தமிழக அரசு தாக்கல் செய்த சீராய்வு மனு கடந்த 26 ஆம் திகதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

இதற்கிடையே, தேசிய பசுமை தீர்ப்பாயம் நியமித்த நீதிபதி தருண் அகர்வால் தலைமையிலான மூவர் குழுவினர் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையிலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆய்வு நடத்தினர்.

தருண் அகர்வால் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்த நீதிபதிகள், இந்த அறிக்கைக்கு தமிழக அரசு ஒரு வாரத்திற்குள் பதில் மனுதாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர். (4-7)

## ...கூட்டுப் படைகள் தாக்குதல் ...பயங்கரவாதிகள் உயிரிழப்பு

...நடந்தாலும், அவர்கள் தாக்குதல்களை நிறுத்தவில்லை.

இதன் காரணமாக ஆப்கானிஸ்தான் படைகளும், அங்குள்ள அமெரிக்க கூட்டுப்படைகளும் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.


இந்த நிலையில், அங்கு காந்தஹார் மாகாணத்தில், மேவான்ட் மாவட்டம், பேண்ட் இடெமர் பகுதியில் தலிபான் பயங்கரவாதிகளை குறி வைத்து அமெரிக்க கூட்டுப் படைகள் வான் தாக்குதல் நடத்தின.

இந்தத் தாக்குதலில் 7 தலிபான் பயங்கரவாதிகள் உயிரிழந்தனர். அவர்களில் தலிபான் பயங்கரவாத அமைப்பின் உள்ளூர் தலைவர் ரகமதுல்லாவும் ஒருவர். 2 தலிபான் பயங்கரவாதிகள் படுகாயம் அடைந்தனர் எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலிபான் பயங்கரவாதிகளின் ஆயுத தொழிற்சாலையும், சக்தி வாய்ந்த வெடிகுண்டு கருவிகளும், கண்ணிவெடிகளும் அழிக்கப்பட்டதாக அந்த தகவல்களீ மேலும் தெரிவித்துள்ளன. (4-7)

# பெரும்பான்மை இல்லாமல் அதிகாரத்தைக் கைப்பற்ற நான் ஆதரவளிக்கமாட்டேன்

## மகிந்த அணி குமார வெல்கம உறுதி



(கொழும்பு)

பெரும்பான்மைப் பலம் இல்லாமல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை தான் ஒருபோதும் ஆதரிக்கமாட்டேன் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சரியானதொரு முடிவை எடுக்காமல் இருப்பதே இப்போதைய நெருக்கடிகள் எல்லாவற்றிற்கும் காரணம்.

இதனால்ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மாத்திரமன்றி ஒட்டுமொத்த நாட்டுக்குமே பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு விரைவாக தீர்வு காணப்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்குப் பல வழிகள் உள்ளன.

தேர்தல் ஒன்று வந்தாலே அதனை செய்து விடலாம்.

பெரும்பான்மைப் பலமில்லாமல் பலாத்காரமாக அதிகாரத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையை ஒருபோதும் நான் ஆதரிக்க மாட்டேன்" என்றும் குமார வெல்கம தெரிவித்துள்ளார். (இ-7)

# வெளிவிவகார அமைச்சருடன் சீனத் தூதுவர் திடீர் சந்திப்பு




(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் சென் ஷியுவான் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சீனத் தூதரக அதிகாரிகள் குழுவொன்றும் வெளிவிவகாரச் செயலர் ரவிநாத் ஆரியசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழுவும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றது.

இலங்கையின் தற்போதைய சர்ச்சைக்குரிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், சீனத் தூதுவர், இலங்கை அரசின் உயர்மட்டங்களுடன் இருதரப்பு விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்துவது இது இரண்டாவது தடவையாகும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 65 பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

தலைமை பொலிஸ் பரிசோதகர்கள் 65 பேருக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் உதவி பொலிஸ் அதிகாரிகளாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரிலேயே இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கொன்றின் போது இவர்களில்48 பேர்வழங்கிய ஒத்துழைப்பினைக் கருத்திற் கொண்டே உதவிப் பொலிஸ் அதிகாரிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த 2014 ஆம் ஆண்டு உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கான நேர்காணல் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் மேலும் 17 பேர் பதவி உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முழு அரச இயந்திரமும் செயலிழக்கும்

## மங்கள சமரவீர எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டைக் காட்டிக்கொடுக்காமல் ஜனாதிபதி உடனடியாக சட்டபூர்வமான அரசாங்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கும் நேரத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த வருடத்துக்கான செலவீனங்களுக்கு தேவையான வரவு-செலவுத்திட்டமோ இடைக்கால வரவு-செலவுத் திட்டமோ இது வரை முன் வைக்கப்படவில்லை.

அதற்குச் சட்டபூர்வ நிதி அமைச்சரும்நாட்டில்இல்லை.

அதனால் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நாட்டில் அரச சேவையாளர்களுக்கான சம்பளம், ஓய்வூதியர்களின் கொடுப்பனவு, சமுர்த்திப் பயனாளிகளுக்கான உதவிகள் எதுவும் வழங்க முடியாமல் போவதுடன் முழு அரச இயந்திரமும் செயலிழக்கப்படும் அபாயம் இருக்கின்றது.

அதனால் இன்னும் 2 வாரங்களுக்குள் சட்டபூர்வமான அரசாங்கம் ஒன்றை அமைத்து புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவையை நியமிக்காவிட்டால் பாரியதொரு அனர்த்தத்துக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இசையும் செடியும்

புல்லாங்குழல் சங்கீதத்தைக் கேட்டு விட்டு செடி கொடி-ஆடு-மாடு எல்லாம் மயங்கிப் போய்விட்டது என்று புராணக் கதைகளில் கேள்விப்பட்டு இருக்கிறோம். இப்பவும் நிஜமாகவே அப்படியெல்லாம் நடக்கும் போல இருக்கு சேர்!

செடி-கொடி எல்லாமுமே தான் சங்கீதத்தை ரசிக்குதாமே! "செடி-கொடிகள் மேலே இசையின் பரிணாமம் எப்படிப்பட்டது?" என்று ஒரு ஆராய்ச்சி எங்கே நடந்தது தெரியுமா? இந்தியாவில்தான்! அதுவும் தமிழ்நாட்டில் நடந்த ஆராய்ச்சி இது.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1962 ஆம் ஆண்டு இந்த ஆராய்ச்சி நடந்தது! அங்கேயிருந்த டாக்டர் டி.சி.சிங் தான் இந்த ஆராய்ச்சியைச் செய்தார்.

கடைசியில் 'தாவர இனங்கள் இசையை ரசிக்கின்றது' என்று கண்டுபிடித்துவிட்டார். ரசிக்கின்றது என்றால் என்ன அர்த்தம்?

இது நல்ல சங்கீதம்! இது மோசமான சங்கீதம் அப்படி என்கிற வித்தியாசம் அதற்கு எல்லாம் தெரிகிறது என்று அர்த்தம். இனிமையான சங்கீதமாக இருந்தால் செடி-கொடிகள் மயங்குகின்றன!

மோசமான-கொடுமையான சங்கீதமாக இருந்தால் தாவரங்கள் நடுங்க ஆரம்பித்து விடும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து...

வெளிநாடுகளிலேயும் இது சம்பந்தமான ஆராய்ச்சி நடந்தது. இல்லினொய்ஸ்லே J.E.SMITH என்ற ஒரு விஞ்ஞானி சில ஆராய்ச்சிகளைப் செய்தார்!

அவர்... இந்த...,அவரை, மக்காச்சோளம் இது மாதிரிப் பயிர்களில் ஆராய்ச்சி செய்தார். கடைசியில் என்ன சொன்னார் தெரியுமா?

"இனிமையான சங்கீதத்தைக் கேட்ட பயிர் அதிகமாக விளைகிறது! கொடுமையான சங்கீதத்தைக் கேட்ட பயிர் குறைவாக விளைகிறது!" என்றார். அது சரி! விவசாயத்தில் விளைச்சலை அதிகப்படுத்துவதற்குச் சங்கீதத்தை உபயோகப்படுத்தினால் என்ன...?

அதில் ஒரு சிக்கல். அதாவது சங்கீதத்துக்காக நாம் செலவு செய்யும் தொகையை விட அந்த சங்கீதத்தைக் கேட்டு அதனால் விளையும் அதிகப்படியான விளைச்சல் குறைவாகத்தான் இருக்கும்! அதாவது சங்கீதத்தை ஏற்பாடு செய்வதற்காக 100 ரூபாய் அதிகப்படியாக விவசாயச் செலவு செய்கின்றோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் நமக்கு அதிகப்படியாக விவசாயத்தில் கிடைக்கும் பணம் 25 ரூபாய் என்றால் அதனால் நமக்கு என்ன பிரியோசனம்?

100 ரூபாய் செலவு செய்து அதனால் 25 ரூபாய் சம்பாதிக்கிறதில் என்ன இலாபம்? இருந்தாலும் இதைப்பற்றியெல்லாம் இன்னும் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் .

சில இடங்களில் பால்பண்ணையில் இனிமையாக இசையைப் போடுகிறார்களாம்... அதைக் கேட்டு விட்டு மாடு எல்லாம் அதிகமாகப் பால் கறக்குதாம்!

ஆடு, மாடு, செடி, கொடி எல்லாம் இசையை ரசிக்குது என்று தெரிந்து போய் விட்டது! அதனால் இனிமேல் அலட்சியமாக அதற்குக்கிட்ட நிற்கும்போது எல்லாம் பாட்டுப் பாடுவதற்கு முயற்சி செய்யக் கூடாது சேர்...

அதற்கு எல்லாம் "வாய்" என்று ஒன்று இல்லாததால் நாங்கள் என்ன பாடினாலும் அது பேசாமல் இருக்கிறது... சகித்துக்கொண்டு இருக்கிறது... இருந்தாலும் அதனுடைய மனது என்ன பாடுபடும்.

அதற்கு மனது வேறு இருக்கிறது என்று கேக்கிறீர்களா? இருக்கு சேர். தாவரங்களுக்கு வலி-பயம்-இன்பம்-துன்பம்-வெறுப்பு-விருப்பு இது மாதிரி நுண்ணிய உணர்வுகள் உண்டாம்.


இப்போதைக்கு நான் சொல்லி வைப்பது இது தான். நாமெல்லாம் இனிமேல் தாவரங்களுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு-அதுதான் பக்கத்தில் யாரும் இல்லை என்னும் நினைப்பில் பாட்டுப்பாடுவது தவறு.

அதுவும் முக்கியமாக தென்னை மரத்துக்கு அடியில் நின்று கொண்டு பாடக் கூடாது!

அந்த மரத்துக்கு சகிக்க முடியாத ஒரு நிலைமை வந்து... இனிமேல் நம்மால் தாங்க முடியாது என்று நினைத்து... உச்சியில் இருந்து ஒரு தேங்காயை தள்ளிவிட்டால்- உச்சந்தலை என்னத்துக்கு ஆகும்?

# கலைத்தரிசனம்





## கலைப்புலவர்,வாழ்நாள் சாதனையாளர் நாகமணி சிதம்பரப்பிள்ளை

### அவர்களுடனான சந்திப்பு

**பதினாறு பிள்ளைகளின் தந்தையான அவர் 1918 ஆம் ஆண்டு தை மாதம் மூன்றாம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனையில் பிறந்தார். தனது பத்தொன்பதாவது வயதில் அரிச்சந்திரன் இசைநாடகத்தினூடாகக் கலையுலகிற்குள் கால்பதித்தார். 1970 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டுவரை கம விதானையாளராகச் செயற்பட்டு வந்தார். இவர் கரகாட்டம், கோலாட்டம், குடமாதற் கும்மி நாட்டார் கலைகளில் தனது திறனை வெளிக்காட்டியுள்ளதோடு சிறந்த இசை நாடக நடிகராகவும் சிறந்த வேட்டையாடல் விற்பன்னராகவும் உள்ளார். நூறு வயதிலும் எந்த மறதியுமின்றி அரிச்சந்திரா இசை நாடகப் பாடல்களைச் சுருதியோடும் அங்க அசைவோடும் பாடும் வல்லமை பொருந்தியவர். இதுவரை இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மரங்களை நாட்டியுள்ளார். இவருக்கு மூன்று தடவைகள் கரைதுறைப்பற்று பிரதேசச் செயலகத்தினால் மதிப்பளிக்கப்பட்டது. இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியின் கலை இலக்கியப் பெருமன்றத்தினால் "கலைப்புலவர், வாழ்நாள் சாதனையாளர்" ஆகிய இரண்டு விருதுகளும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். இறைவனோடு ஒன்றித்து வாழவும் அவர் அருளால் காரியங்கள் தொடங்கவும் பாரம்பரியக் கலைகளை வளர்க்க இளைஞர்கள் முன்வர வேண்டும். இயற்கையோடு ஒன்றித்து வாழ வேண்டுமென்று மனந்திறந்து கூறுகின்றார். கலைப்புலவர் நாகமணி சிதம்பரப்பிள்ளை தன்னைப்பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரியின் கலைத்தரிசனப் பகுதிக்காக தந்தவற்றைத் தருகின்றோம்.**

**➢ நூறு வயது நிரம்பிய பழம்பெரும் கலைஞரான தாங்கள் கலைத்துறைக்குள் எவ்வாறு நுழைந்தீர்கள்?**

1937 ஆம் ஆண்டு அதாவது எனது பத்தொன்பதாவது வயதில் குமுழமுனை சரவணையார் வளவில் 600 நடிகர்கள் கூடியிருந்தோம். அதிலே அரிச்சந்திரா நாடகத்திற்குப் பொருத்தமான நடிகர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு இடம் பெற்றது. அதிலே நான் நடித்தும் பாடியும் எனது திறனை வெளிக்காட்டினேன். இந்த நடிகர் தெரிவினை அண்ணாவியார் பேச்சிமுத்து நிகழ்த்தினார். அரிச்சந்திரனாக நான் தெரிவு செய்யப்பட்டேன். அன்றிலிருந்து இரண்டு வருடங்களுக்கும் இருபது மேடையேற்றம் செய்தோம். பின்னர் தொடர்ச்சியாகப் பல இடங்களில் மேடையேற்றம் செய்தோம். இன்றும் அரிச்சந்திரா இசை நாடகத்தில் வருகின்ற பாடல்களைச் சுருதியோடு மறதியின்றிப் பாடுவேன். எனது நடிப்பும் குரல் வளமும் உடல் அமைப்பும் தொடர்ந்து கலையுலகில் ஈடுபட வைத்தது.

**➢ தங்களின் குமுழமுனைக் கிராமத்தில் தோற்றம் பெற்ற யானையை அடக்கிய அரியாத்தை என்ற நாடகத்தின் உண்மை வரலாற்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தை முன்னொரு காலத்திலே சின்ன வன்னியன் எனும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் வன்னியன் மேடு என்று குறிப்பிடப்படுகின்ற இடத்திலேயே தான் அவனுடைய இராசதானி அமைந்திருந்தது. அக்காலத்தில் பயிர்களை அழிக்கும் யானைகளைப் பிடிப்பதற்கென்று பணிக்கர்கள் என்கின்ற ஒரு குலத்தவர்களும் வாழ்ந்து வந்தார்கள் . அப்போது எவருக்கும் அடங்காத கொம்பன் யானையொன்று வயல் நிலங்களை அழித்து அட்டகாசம் செய்த வண்ணமிருந்தது. விவசாயிகள் அந்த யானையை விரட்டியடிக்க முற்பட்டார்கள். யானையோ விவசாயிகளை விரட்டி விட்டு நெற்பயிர்களை அழித்த வண்ணமிருந்தது. அப்போது விவசாயிகள் சென்று சின்னவன்னி மன்னனிடம் முறையிட்டார்கள்.

அரசன் பணிக்கர்களை அழைத்து எவருக்கும் அடங்காமல் ஒரு யானை குமுழமுனை பெரிய வயல்வெளி என்று குறிப்பிடுகின்ற இடத்தில் நின்று நெல் வயல்களை எல்லாம் அழித்த வண்ணமிருக்கின்றது. அந்த யானையைப் பிடிக்க வல்ல பணிக்கர் உங்களுள் யார் இருக்கின்றார் என்று வினவ அங்கே நின்ற பணிக்கர்களில் ஒருவன் மன்னவா வேலப்பணிக்கன் தான் அந்த அடங்காத யானையைப் பிடிக்கவல்லவன் என்று கூறினான். உண்மையிலேயே வேலப்பணிக்கன் வல்லவன் தான். அப்படியிருந்தும் நீலப் பணிக்கன் கூறுகின்றான், மன்னவா அப்படியல்ல வேலப் பணிக்கனால் முடியாது. சிலவேளை வேலப் பணிக்கனின் மனைவி அரியாத்தையினால் சிலவேளைகளில் முடிந்தாலும் முடியலாம் எனக் கேலியாகக் கூறினார். வேலப்பணிக்கனின் உள்ளம் குமுறுகின்றது. வேலப்பணிக்கன் தனது வீட்டிற்குச் சென்று மனமுடைந்த நிலையில் சோகமாக வீற்றிருக்கின்றான். தனது துணைவன் சோகமாக இருப்பதைக் கண்ட அரியாத்தை ஓடோடிச் சென்று நாதா ஏன் முகவாட்டத்துடன் இருக்கின்றீர்கள். என்ன நடந்தது. நடந்தவற்றைக் கூறுங்கள் என்று கேட்க வேலப் பணிக்கனும் நடந்தவற்றைக் கூறுகின்றான்.

உடனே அரியாத்தை தனது கணவனிடம் நாதா கவலையை ஒழியுங்கள். நானே சென்று அந்த யானையைப் பிடித்து வருகின்றேன் என்று கூறி கணவனிடம் விடை பெற்றுக் கொண்டு செல்கின்றாள். செல்லும் போது பல தடைகள் வந்தபோதும் எதையும் பொருட்படுத்தாமல் கொட்டுக் கிணற்று விநாயகரையும் நாகதம்பிரானையும் வணங்கி விடைபெற்றுச் சென்று அந்த மதங்கொண்ட யானையைப் பிடித்து வருகின்றாள். அரசன் அரியாத்தையின் வீரத்தைப் பாராட்டிப் பல பரிசுகளும் வழங்கிக் கௌரவித்தான். யானையைக் கொண்டு சென்று வன்னியன் மேட்டினிலே நின்ற புளியமரமொன்றில் கட்டும்படி பணித்தான். அரியாத்தையும் அரசன் சொல்படி புளியமரத்தில் யானையைக் கட்டிவிட்டு வந்தாள். அரசனது வீட்டினிலே அரியாத்தைக்கு விருந்து விழா நடந்தது.

அப்போது சூழ்ச்சியாக நிலப்பணிக்கன் வெற்றிலையில் நஞ்சைத் தடவிக் கொடுத்தான் அரியாத்தைக்கு. கபடமறியாத அரியாத்தை அவ்வெற்றிலையை மென்று உயிர் பிரிந்தாள். இதனுடைய வரலாறு பெரிது. நான் சுருக்கமாகக் கூறினேன். இன்றும் எமது கிராமத்திலே பெரியவெளி எனும் இடமும் கொம்பன் யானையைப் பிடித்த இடத்தை கொம்பன் படுத்த கண்டல் என்றும் யானை கட்டிய புளியமரம் என்றும் பணிக்கர்கள் வாழ்ந்த இடத்தை பணிக்கர் வயல் என்றும் இன்றும் அடையாளச் சின்னமாக உள்ளது. கரி என்று மறுபெயர் கொண்ட யானையை பிடித்த காரணத்தால் எமது பிரதேசத்தை கரிக்கட்டுமூலை என்றும் அன்றிலிருந்து இன்றுவரை அழைக்கப்பட்டு வருகின்றது. அரியாத்தை போன்ற வீராங்கனைகள் வாழ்ந்த மண் எமது மண் என எண்ணும் போது மிகவும் பெருமையாகவுள்ளது. இன்றும் நாம் அரியாத்தையின் இந்தக் கதையை வில்லிசையாகவும் நாடகமாகவும் இப் பிரதேசத்தில் செய்து வருகின்றோம்.

**➢ தாங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பழம்பெரும் கலைஞராகத் திகழ்கின்றீர்கள். அந்தவகையில் 11 குடமூதற் கும்மியாட்டம் எப்படித் தோற்றம் பெற்றது பற்றியும் அதன் ஆட்டம் பற்றியும் கூறுங்கள்?**

முன்னொரு காலத்தில் மழை இல்லாமல் நாடு நகரமெல்லாம் பெரும் வரட்சியைச் சந்தித்தது. குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாத நிலை உருவாகிய காலத்திலே மக்கள் எல்லோரும் அதாவது ஆண்கள்–பெண்கள் என்ற பேதமின்றி குடங்களைக் கையில் எடுத்துக்கொண்டு பிள்ளையார் சிந்து, அம்மன் சிந்து, குளக்கோட்டன் சிந்து, விநாயகர் கும்மி போன்ற பாடல்களைப் பாடி ஆடி கொட்டுக்கும்மி கிணற்று விநாயகர் ஆலய முன்றலிலே நின்று எம்பெருமானை வேண்டி மனமுருகி நின்றவேளை திடீரெனப் பெரு மழை பெய்து ஆறு, குளம், கேணி, கிணறு என்று எல்லாவற்றிலுமே நீர் நிறைந்து வரட்சி மறைந்ததாகவும் ஒரு கதை. அன்றிலிருந்து தான் இந்தக் குடம் ஊதல் கலை உருவாகியதென்றும் இந்தக் கலையை குடமோதல் என்றும் குடமாடுதல் என்றும் குடம் ஊதல் என்றும் கிராமங்களுக்குக் கிராமம் பற்பல பெயர்களில் இந்தக் கலையை அழைத்து வருகிறார்கள். இந்தக் கலையானது முல்லைத்தீவு மாவட்டத்திலே எமது கிராமமான குமுழமுனையில் தான் ஆரம்பமான கலை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கலையை நாம் 6 பேர்கள் முதல் 8 பேர் வரை குழுவாகச் சேர்ந்து வரவேற்பு நிகழ்வுகளுக்கு இன்றும் பாரம்பரியமாகக் கலையைப் பாதுகாத்து வருகின்றோம்.

"வீரத்தமிழ்தாயே உன்பாதம் நாங்கள் வீறுடன் போற்றி செய்கின்றோம். சோரமின்றி நாம் கும்மியடித்திட தீராத நல்லருள் தந்திடம்மா" என்ற பாடல் குடமூதற்கும்மி பாடலாகும்.

**➢ தாங்கள் வேட்டையாடுதலிலும் அதிசிறந்த ஒருவராகத் திகழ்ந்துள்ளீர்கள். வேட்டையாடும் முறைகள் பற்றிக் கூறுங்கள்?**

எமது பிரதேசக் காடுகளில் பலவகை விலங்குகளும் ஊர்வனவும் சிறுவிலங்குகளும் பல இனப்பறவைகளும் பலவகை மீனினங்களும் இயற்கையாகவே வாழ்கின்றன. இவற்றால் மனிதன் தனது தேவைகளுக்கும் உணவுக்கும் வேண்டியவற்றை வேட்டையாடியதுடன் வேட்டையாடும் முறைகளையும் அறிந்து வாழ்ந்தான். எமது பிரதேச வேட்டையாடல் முறைகளில் ஈட்டி எறிதல், கல் எறிதல், கண்டக்கோடரி எறிதல், பூமராங் வீசுதல், கவண் எறிதல், பொறிக் கிடங்கு அமைத்தல், பட்டி அடைத்தல் ,கண்ணி வைத்தல், சுருக்கு வைத்தல் வளை தடிப் பொறி வைத்தல், வலை வைத்தல், பொறி வைத்தல், எறிகயிறு வீசுதல், கொம்புக் கயிறு கொழுவல், நாய்களைக் கொண்டு வேட்டையாடல், கட்டுத்துவக்கு, இடியன் துவக்குகளைப் பயன்படுத்தல், வெங்காய வெடி வைத்தல், கால் தடங்கண்டு வேட்டையாடல் போன்ற முறைகள் முக்கியமானவை. வேட்டையாடுவதற்கு முதலில் மனத் துணிவும் வேகமும் காட்டு நிலைமைகளைப் புரிந்து கொள்ளும் தன்மையும் இருக்க வேண்டும். இந்த வேட்டையாடுதல் மூலம் கரடி, காட்டுமாடு, பன்றி, மான், உடும்பு, மரை, புறுட்டை, முயல், உக்குளான், மர அணில், பறவை இனங்கள் என்பன வேட்டைப் பொருளாகக் கிடைக்கும். இவற்றோடு தேன் எடுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு பலமுறைகளில் தேன் எடுப்போம். வேட்டையாடிய உயிரிணங்களைத் தடியிலே போட்டுக் கொண்டு காவி வருவோம். இந்தத் தடியினை "கர்வு தடி" என்பார்கள். இந்தத் தடியிலிருந்து தான் காவடி உருவானது என்றும் கதையுண்டு.

**➢ கரகாட்டத்தைப் பற்றிக் கூறுங்கள்?**

கரகாட்டம் என்பது மிகவும் எளிமையான தெய்வங்களுடனே பின்னிப்பிணைந்த குறிப்பாக அம்மனுக்கென்றே உருவான கலை என்றுதான் கூற வேண்டும். "கரகம் பிறந்ததம்மா முத்துமாரி அம்மன் உந்தன் கருணை முகம் காட்டேனம்மா மாரி தேவி அம்மன்" என்னும் அம்மன் பாடலுக்கு அமைவீக கருணையே உருவாமானதுதான் கரகம் என்பார்கள். கரகம் என்பது களியாட்டத்துக்கு உவப்பானதல்ல. அக்காலத்தினிலே தீராத நோய், துன்பம், வறுமை, பேய், பிசாசு, முகாவுதல், மழையின்மை போன்ற எப்பேர்ப்பட்ட துன்பங்கள் வந்தாலும் உடனே அம்மனுக்குக் கரகம் எடுப்பதாக நேர்த்தி வைப்பார்கள். விரதமிருப்பார்கள். வேண்டுதல் செய்வார்கள். தங்களுடைய அனைத்து வேண்டுதல்களுக்குமாக அம்மன் குளிர்ச்சி பாடி, ஆடி, கரகமெடுத்து, தீ மிதித்து, அம்மனை ,காளியைக் குளிரவைப்பது முன்னோர் வழக்கமாகவிருந்தது. இப்போதும் சில ஆலயங்களிலே கரகமெடுப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கரகத்தை நாம் எமது தலையிலே வைத்து கை பிடியாது அங்குமிங்கும் சுழன்றும் இருந்தும் தேர்மீது வைத்ததும் மீண்டும் தலைக்கெடுத்தும் மீண்டும் மறுதோளுக்கு எடுத்தும் இப்படியாக தங்களுடைய மேனியெங்கும் கரத்தைச் சுழற்றி ஆடக்கூடிய வித்துவான்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எமது சமூகத்துக்கு முன் வந்து எமது இளம் சமுதாயத்துக்கு தங்களுடைய அருங்கலைக்ளைக் கற்றுக்கொடுத்து எமது பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்க முன்வர வேண்டுமென வேண்டுகின்றோம்.

ஆனாலும் நாம் எமது கிராமத்திலே ஓர் அடையாளச் சின்னமாகத் தான் இந்தக் கரகத்தை வைத்திருக்கின்றோம்.

நேர்கண்டவர்:
ஜெயம் ஜெகன்

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஆராய்ந்து முடிவு

## நீதியமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என பொது நிர்வாக மற்றும் நீதி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.



அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மற்றும் வழக்குகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பிரதியமைச்சர்களான வியாழேந்திரன், அங்கஜன் இராமநாதன் மற்றும் காதர் மஸ்தான் ஆகியோர் தன்னிடம் அறிக்கை சமர்ப்பித்திருப்பதாகவும் சுசில் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இதற்கு முன்னரும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது இந்த உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை ஆராய்ந்து பார்க்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பான்மை இனத்தவர்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் சிறுபான்மையினரின் பெரும்பான்மையைப் பெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இணைந்திருக்கும் சூழ்நிலையில் கைதிகளை விடுவிக்கக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது என்று அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், நீதியமைச்சர் மற்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பி ஆகியோருடன் கலந்துரையாடி அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பொறிமுறையொன்றை விரைவில் தயாரிக்கவிருப்பதாக பிரதியமைச்சர்கள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொதுத் தேர்தலை வலியுறுத்தி புறக்கோட்டையில் போராட்டம்





(கொழும்பு)

பொதுத் தேர்தலை வலியுறுத்தி மகிந்த அணிக்கு ஆதரவான பொதுஜன பெரமுன கட்சி சார் ஜனநாயக தொழிற்சங்க சம்மேளனம், பொதுச்சேவை தொழில் சங்க சம்மேளனம் உள்ளிட்ட பல்தரப்பு தொழிற்சங்கங்கள் கூட்டிணைந்து கொழும்பில் நேற்று முன்தினம் போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தன.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டத்தில் ஜனநாயக தொழிற்சங்க சம்மேளனம், பெருந்தெருக்கள் அதிகார சபை தொழிற்சங்கம், எண்ணெய் கூட்டுத்தாபனம், நீர் வழங்கல் அதிகார சபை, சுய தொழில் புரிவோருக்கான சம்மேளனம், பொது சேவை தொழில் சங்க சம்மேளனம், வங்கி ஊழியர் முன்னணி மற்றும் சமுர்த்தி தொழில் சங்கம் போன்றவற்றின் கூட்டிணைந்த பொதுஜனபெரமுன கட்சிசார் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்த இப் போராட்டத்தில் அனைவரினதும் ஒருமித்த கோரிக்கை பொதுத் தேர்தலை வலியுறுத்தியதாகவே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மட்டக்களப்பு துயிலுமில்லங்களில் பிடுங்கி அகற்றப்பட்ட நடுகற்கள்





(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள, வாகரை மற்றும் மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லங்களில் நாட்டப்பட்ட நடுகற்கள், பொலிஸாரின் உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் மாலை பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளன.

மாவீரர் நாளான நேற்று முன்தினம் மாலை துயிலுமில்லங்களில் ஈகச்சுடர் ஏற்றுவதற்காக, புதிதாக நடுகற்கள் நாட்டப்பட்டிருந்தன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை அங்கு சென்ற பொலிஸார் துயிலுமில்லங்களில் நாட்டப்பட்ட நடுகற்களை அகற்றாவிடின் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறப்படும் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, இரண்டு துயிலுமில்லங்களிலும் நாட்டப்பட்டிருந்த, 120 இற்கும் அதிகமான நடுகற்கள் நேற்று முன்தினம் மாலை பிடுங்கி அகற்றப்பட்டன.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுத்த உத்தரவில், விடுதலைப் புலிகளின் சின்னம், கொடி, பாடல்களை பயன்படுத்தாமல், நினைவுகூரல் நிகழ்வை நடத்த முடியும் என கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நான்கு நாணயக் குற்றிகள் வெளியீடு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி புதிதாக 10 ரூபா உட்பட நான்கு நாணயக் குற்றிகளை வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் புதிய நாணயக்குற்றிகளை கையளித்து வெளியிட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். இந் நிகழ்வு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. (இ-7)

# சர்வதேச தேரவாத பௌத்த மாநாடு மைத்திரி தலைமையில்








(கொழும்பு)

சர்வதேச தேரவாத பௌத்த பல்கலைக்கழக சங்கத்தின் ஐந்தாவது சர்வதேச மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பில் ஆரம்பமானது.

தேரவாத பௌத்த நாடுகளுக்கிடையில் சமய, கலாசார உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்குடன், சர்வதேச தேரவாத பௌத்த பல்கலைக்கழக சங்கம் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தும் மாநாட்டிற்கான அனுசரணையை இம்முறை இலங்கை வழங்கியுள்ளது.

தேரவாத பௌத்த தத்துவம் எதிர்நோக்கும் சவாலகளுக்கான உரிய தீர்வுகளை கண்டறிவதற்கு இம் மாநாடு மிகவும் முக்கியமானது என்பதுடன், நவீன உலகிற்கு பொருத்தமான வகையில் தேரவாத பௌத்த தத்துவத்தை சமூகமயப்படுத்துவதும் தேரவாத பௌத்த கல்வித்துறை ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதும் இதன் மற்றுமொரு நோக்கமாகும்.

தேரவாத பௌத்த தத்துவம் பரவியுள்ள 10 நாடுகளைச் சேர்ந்த மகா சங்கத்தினரும் நிபுணர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்வதுடன், சிட்டகொங் பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் மியன்மாரின் சுஜித் நிக்காயவின் உபசாங்கநாயக்கர் சங்கைக்குரிய. அஷீன் ஞானிஸ்ஸர தேரருக்கு ஜனாதிபதி விசேட நினைவுச் சின்னமொன்றை வழங்கி வைத்ததுடன், சங்கைக்குரிய தேரரும் ஜனாதிபதிக்கு புத்தர் சிலையொன்றை வழங்கி வைத்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

107

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

எது எப்படியிருந்தும் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள இளந் தலைமுறையினருக்கு சகல மட்டத்திலும் கல்வி வாய்ப்பினைப் பெறுவதற்கான சந்தர்ப்பமும் வசதியும் டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தில் கிடைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அத்தோடு பெண்கள் கல்வி கற்கின்ற வாய்ப்பினை முதன் முதலில் ஏற்படுத்தியவர்கள் டச்சுக்காரர் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாக நிலையாகக் காணப்படுகின்றது.

டச்சுக்காரர் தமது புதிய மதத்தை மக்கள் மத்தியில் பரப்புவதற்கே கல்வியை ஓர் ஆயுதமாக பயன்படுத்தியபோதும் அது தமிழர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

மேலும் மேலைத்தேயக் கற்கை முறைகள், சிந்தனைகள் என்பன தமிழரின் இளந் தலைமுறையினருக்கு சகல மட்டத்திலும் கிடைத்ததன் விளைவாக அடுத்து வருகின்ற பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலும் இத் தலைமுறையினர் அவ்வாறான வாய்ப்பைத் தொடர்ந்தும் பெற்றிருக்கிறார்கள்.

சுருங்கக்கூறின் மேற்படி தலைமுறையினர் ஒரு நவீன யுகத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு டச்சுக்காரரின் பரவலான கல்விக் கொள்கையும் செயற்பாடுகளும் பாரிய பங்களிப்பைச் செய்திருக்கும் என்பதனை மறுப்பதற்கில்லை.

அத்தோடு தமிழரின் சமூக, சமய, கலாசார, பொருளாதார நிலைகள் தொடர்பான இவ்வாறான தாக்கங்களும் விளைவுகளும் அடுத்து வரப்போகின்ற பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் மிகவும் துலாம்பரமாக வெளிப்பட்டு நிற்பதனையும் காணமுடிகிறது.

பதினேழாம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலேயே தமிழும் இலக்கியமும் ஓரளவு பேணிக் காக்கப்பட்டிருக்கின்றன என்பதனையும் டச்சு ஆவணங்களின் மூலமாக அறியமுடிகிறது.

புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதற்கு கல்வியை வளர்க்க வேண்டிய தேவை ஒரு கட்டாயத் தேவை டச்சுக்காரருக்கு ஏற்பட்டது பற்றி மேலே ஆராயப்பட்டது.

முக்கியமாக புரட்டஸ்தாந்து பாதிரிமாரும் போதகரும் தமிழைக் கற்கவேண்டிய கட்டாய நிலையில் காணப்பட்டார்கள்.


தமிழ்மொழி மூலமாகவே தமது மதத்தை இலகுவாகப் பரப்ப முடியும் என்பது பல்தேயு பாதிரியாரினதும் கல்விக்குப் பொறுப்பான ஆணையாளரினதும் கொள்கையாகக் காணப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்துவதில் பல்தேயு முன்னுதாரணமாக இருந்தார். அவர் தமிழைக் கற்பதில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டார்.

மேலும் பெருந்தொகையான தமிழ்மக்களும் மாணவர்களும் டச்சுமொழியைக் கற்பதைவிட எண்ணிக்கையில் மிகக் குறைந்த டச்சுப் பாதிரிமாரும் போதகரும் ஆசிரியர்களும் தமிழ் மொழியைக் கற்பதே சரியதான முறையெனத் திடமாக நம்பினர்.

ஏற்கனவே கூறப்பட்டது போல யாழ்ப்பாணத்திலும் சிலாபத்திலும் நீர்கொழும்பிலும் தமிழ்ப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் 30 ஆயிரத்திற்கு மேலான தமிழ் மாணவர்களுக்கு டச்சு மொழியிலும் தமிழிலும் கல்வி போதிக்கப்பட்டது.

அத்தோடு வண்ணார்பண்ணையில் சுதேச மக்களே தமிழ்ப் பாடசாலையொன்றையும் ஆரம்பித்து நடத்தியிருக்கின்றனர். மேலும் டச்சுக்கார ஆதாரங்கள் மூலமாக அறியப்படாத இன்னும் எத்தனையோ தமிழ்ப் பாடசாலைகள் தமிழ்ப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கலாம்.



"புரட்டஸ்தாந்து மதம் சம்பந்தமான சிறிய நூல்க ளும் தமிழ்மொழியில் வெளியிடப்பட்டன. தேசாதிபதி வான் இம் கொப் (Van Im Hoff) (1736-1740) கொழும்பில் முதன்முறையாக ஒரு அச்சுக் கூடத்தை ஆரம்பித்தார். தமிழிலக்கியத்தின் ஒரு முக்கிய மைல்கல்லாக இந் நிகழ்வு அமைந்தது. இங்கு பல தமிழ் நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன"

அத்தோடு பல்தேயு பல கிறிஸ்தவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். உதாரணமாக அவர் 1671 இல் தனது சொந்த ஆக்கமான Beschrgving Van Malabar en Coromendel என்னும் நூலை 1671 இல் தமிழில் வெளியிட்டார்.

மேலும் புரட்டஸ்தாந்து மதம் சம்பந்தமான சிறிய நூல்களும் தமிழ்மொழியில் வெளியிடப்பட்டன. தேசாதிபதி வான் இம் கொப் (Van Im Hoff) (1736-1740) கொழும்பில் முதன்முறை யாக ஒரு அச்சுக்கூடத்தை ஆரம்பித்தார்.

தமிழிலக்கியத்தின் ஒரு முக்கிய மைல்கல்லாக இந் நிகழ்வு அமைந்தது. இங்கு பல தமிழ் நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன. மேலும் டச்சுக்கார அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மாதகலைச் சேர்ந்த மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலை என்னும் ஒரு வரலாற்று இலக்கிய நூலை எழுதி வெளியிட்டார்.

எனவே மேற்படி நிகழ்வுகளின் மூலம் தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தில் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தியடைந்து காணப்பட்டது என்பது புலனாகின்றது.

இது தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் என்பன பொறுத்து ஒரு மறுமலர்ச்சிக்காலத்தின் ஆரம்பக் கட்டம் எனக் கூறுவதில் தவறில்லை.

அடுத்து வருகின்ற பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சைவசமயம் மட்டுமல்லாது தமிழ்மொழியும் தமிழிலக்கியமும் வளர்ச்சிப் பாதையை நோக்கி மிக விரைவாகச் சென்று ஒரு முழுமையான வளர்ச்சிக் கட்டத்தை அடைவதைப் பார்க்க முடிகின்றது. இது பற்றி அடுத்த அத்தியாயத்தில் விசேடமாக ஆராயப்படும்.

எது எப்படியிருப்பினும் தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள டச்சுக்காரர் ஆட்சிக்கால நிர்வாக அமைப்பு முறைகளை மிகச் சுருக்கமான ஆராய வேண்டியுள்ளது.

(தொடரும்)

# தமிழ் மக்களின் முன் இரண்டு தெரிவுகளே

## நாடு கடந்த தமிழீழ அரசு சுட்டிக்காட்டு

(லண்டன்)

அரசியல் யதார்த்தத்தை நன்கு ஆராய்ந்து பார்ப்பின் தமிழ் மக்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் உள்ளன என நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமார் மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.



இறைமையும் சுதந்திரமும் கொண்ட தமிழீழத் தனியரசு ஒன்றே தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும் என்பதில் பற்றுறுதி கொண்டு எமது மாவீரர்கள் களமாடினர்.

தமிழீழ மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக, சிங்களத்தின் இன அழிப்புக்கு உள்ளாகாது வாழ்வதற்கான வாய்ப்பினைத் தமிழீழத் தனியரசினை அமைப்பதன் மூலமே அடையலாம் என்ற தொலைநோக்குடன் மாவீரர்கள் களமாடினர்.

சாதிகள் அகற்றப்பட்ட, ஆண்-பெண் சமத்துவம் நிறுவப்பட்ட, சமூக ஏற்றத் தாழ்வுகள் விலக்கப்பட்ட, இயற்கைச்சூழற் பாதுகாப்பில் அக்கறை கொண்ட, சமூக நீதி நிலவுகின்ற சமூகமொன்றைப்படைக்கும் உன்னத இலட்சியத்துடன் மாவீரர்கள் களமாடினர்.

தமிழீழ மக்களின் இறைமையைப் பாதுகாக்கப் போரிட்ட எம் மாவீரர்களின் உன்னதமான போராட்டம் எமது தேசத்துக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது.

மாவீரர்கள் விட்டுச்சென்ற வழித் தடங்கள் நாம் சென்றடைய வேண்டிய இலக்கை எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

மாவீரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு வணக்கம் செய்யும் இன்றைய நாளில் அவர்களுக்குத் தலைவணங்கி அவர்களின் கனவுகளை எம்முள்ளே உள்வாங்கி உறுதி எடுத்துக் கொள்வோம்.

அரசியல் யதார்த்தத்தை நன்கு ஆராய்ந்து பார்ப்பின் தமிழீழ மக்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் தான் உள்ளன என்பது தெளிவாகும்.

உரிமைகளுக்காக விட்டுக் கொடுப்பின்றிப் போராடி, எமக்கான சுதந்திர தாயகத்தை அமைத்து வாழ்தல் ஒரு தெரிவு. இத் தெரிவில் வெற்றியடைவதற்கான நடைமுறைச் சாத்தியம் குறைவு என்று ஐயம் கொள்வோர் பலருண்டு.

மற்றைய தெரிவு சிங்கள இனவாதத்துக்குப் பயந்தோ அல்லது பணிந்தோ எமது அடிப்படைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக இழந்து. இறுதியில் சிங்களப் பெருந் தேசியத்துக்குள் காலப் போக்கில் கரைந்து போவது.

முதலாவது தெரிவில் நாம் வெல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஒடுக்குமுறையை எதிர்த்துநிற்கும் எதிர்ப்பு உணர்வினை தணியாமல் காத்து எமது போராட்டத்தைச் செவ்வனே பேணிக் கொள்ளும்வரை நாம் தோல்வியடைந்தவர்களாகப் போய் விட மாட்டோம். சரியானதொரு சந்தர்ப்பத்தில் வெற்றிக்கான வாய்ப்பும் போராட்டத்தைத் தளராது தொடரும் போது மட்டுமே கிடைக்கும்.

இரண்டாவது தெரிவு தமிழ்மக்களுக்கு மிகவும் அவமானகரமான தோல்வியையே தேடித் தரும். எம்மால் எதுவும் முடியாது என்று சரணாகதியடையும் நிலைக்கு இட்டுச் செல்லும். சிங்கள மேலாதிக்கத்தை இயல்பாக ஏற்றுக் கொண்டு அடிபணிந்து வாழும் இழிநிலைக்கு எம்மை இட்டுச் செல்லும். இந் நிலை ஏற்படின் தமிழ் மக்கள் இலங்கைத்தீவில் நிரந்தரமாகத் தோல்வியடைந்த மக்களாக மாறிவிடுவார்கள்.

இந்த இழிநிலை தமிழ் மக்களுக்கு ஏற்படாது காக்கும் காவல் தெய்வங்களாக எமது மாவீரர்கள் இருப்பார்கள் என்பது எமக்கு நம்பிக்கை தரும் விடயமாக இருக்கிறது.

தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியவாறு மாவீரர்கள் எம்மை வழிநடத்துவார்கள். தமிழ் மக்களின் போராட்டம் வழிதவறிப் போகாதவாறு எமக்கான காப்பரணாக மாவீரர்கள் இருப்பார்கள்.

மாவீரர்களுக்கு நாம் செய்யும் வணக்கம் இவர்களது கனவுகளை நனவாக்க உழைப்பதாகத்தான் இருக்க முடியும்என்ற உணர்வுடனும் உறுதியுடனும் செயற்படுவோமாக." என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## தந்தையை தடியால் தாக்கி கொலை செய்த மகன் கைது

(நோட்டன்பிரிட்ஜ்)

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காசல்ரீ ஜன பதய பகுதியில் தந்தையைத் தடியால் தாக்கிக் கொலை செய்த மகனை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக காசல்ரீ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன நோயாளியான மகனுக்கும் தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையின் உச்சக்கட்டமாகவே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் 4 பிள்ளைகளின் தந்தையான 74 வயதுடைய ஏ.ஜே.ஜீனதாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது டிக்கோயா கிளாங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஹற்றன் நீதவானின் மேற் பார்வையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம், நாவலப்பிட்டி சட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 43 வயதுடைய சந்தேகநபரான உயிரிழந்தவரின் மகன் நோட்டன்பிரிட்ஜ் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அதேவேளை ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

(பிட்டிகல)

பிட்டிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிட்டிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிட்டிகல, பொலிஸ்நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கிணங்க மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே நேற்று அதிகாலை துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 45 வயதுடையவர் என ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1571


### ஆயிசா

வலி தந்தவர்களை உயிராய் நினைப்பது தாய்மையும் காதலுமே




### மகி

புரிதல் என்பது முகங்களில் அல்ல




### நீரஜா




### கமலினி


கஷ்டமே தெரியாமல் குழந்தைகளை வளர்க்கிறார்கள்



அந்தக் குழந்தை வளர்ந்ததும் நிறையத் தெரிந்து கொள்ளக் கஷ்டப்படுகிறது

### ராஜேஸ்

இழப்பதற்கு எதுவும் இல்லை எனும் போது



துணிச்சல் அதிகமாகிறது

### சுகன்யா


பேச நேரமில்லை என்றால் நம்பாதீர்கள்



அவர்களின் முன்னுரிமைப் பட்டியலில் நீங்கள் இல்லை என்பதே உண்மை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 2018 SLT குழுமத்தின் 3 ஆவது காலாண்டுவரையான YTD இலாபம் 23% EBITDA 16% உயர்வு





தேசத்தின் தொலைத் தொடர்பு சேவை வழங்குநரான ஸ்ரீலங்கா டெலிகொம் (PLC), 2018 செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவுற்ற 9 மாதங்களுக்கான நிறுவனம் மற்றும் குழுமத்தின் நிதிப் பெறுபேற்றினை வெளியிட்டுள்ளது. SLT குழுமமானது உடைமைக் கம்பனி ஸ்ரீலங்கா டெலிகொம் (PLC) மற்றும் அதன் கைபேசி துணை நிறுவனமான மொபிடெல் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் உட்பட எட்டு துணை நிறுவனங் களை உள்ளடக்கியது.

குழும அறிக்கையின்படி கடந்த ஒன்பது மாதங்களில் வரிக்கு பின்னரான நிகர இலாபமானது 3.99 பில்லியனுடன் ஆண்டுக்கு ஆண்டு (YoY) வளர்ச்சி வரவேற்கும்படி 23.4வீதமாக உள்ளது. தொடர்ச்சியான வருமான அதிகரிப்பே நிறுவன நிகர இலாப முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது. மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட காலத்தில் fixed voice, தரவு, கைபேசி, எடுத்துச் செல்லும் வர்த்தகங்கள், தொலைக்காட்சி மற்றும் கூட்டு வியாபார துறை உட்பட அனைத்து வருவாய் மூலங்களினதும் பங்களிப்புடன் வருமானமானது 60.1 பில்லியனாக 6.6வீதம் YoY வளர்ச்சியை பெற்றுள்ளது. வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கோடு டிஜிற்றல் மயமாக்கலூடாக புதுமையான பொருட்கள் சேவை வழங்கலுடன் குழுமம் CSP (தொலைத் தொடர்பு சேவை வழங்கல்) இலிருந்து DSP (டிஜிற்றல் சேவை வழங்கல்) நோக்கி பயணிக்கிறது.

சிறந்த வருவாய் வளர்ச்சி, செலவு கட்டுப்பாட்டு முயற்சிகளின் பலனாக குழுமத்தால் வலுவான EBITDA (வட்டி வரித் தேய்மானம் மற்றும் கடனீட்டுக்கு முன் வருவாய்) எல்லை 31.1வீதமாக இருப்பதோடு மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படும் ஒன்பது மாதங்களில் EBITDA 15.8% YoY வளர்ச்சியுடன் 18.7 பில்லியனாக உள்ளது.

மதீப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட காலத்தில் 1.1 பில்லியன் ரூபாய் அந்நிய செலாவணி இழப்பும் குழுமத்தின் நிகர இலாபங்களில் தாக்கம் செலுத்தியுள்ளது. மேல் குறிப்பிடப்பட்ட இழப்பு தாக்கம் செலுத்தாவிட்டால் வரிக்கு பின்னரான நிகர இலாபம் 5.1 பில்லியன் ரூபாயாக இருக்கும்.

குழுமத்தின் தலைவர் குமாரசிங்க சிறிசேன குழுமத்தின் ஆரோக்கியமான வளர்ச்சி வீதம் மற்றும் குழுமத்தின் வலுவான பெறுபேறுகள் குறித்து தனது மகிழ்ச்சியை வெளியிட்டார். "குழுமத்தின் மூலோபாய முடிவுகள் மற்றும் மூலோபாய முதலீடுகள் மூலம் சவாலான பொருளாதாரத்திற்கு மத்தியிலும் எம்மால் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்ட முடிந்துள்ளது. இலங்கையின் தொலைத் தொடர்புகள் சேவையின் முன்னோடியாகவும் தேசிய தொலைத் தொடர்பு சேவை வழங்குநராகவும் நாட்டின் ஒட்டு மொத்த தொலைத்தொடர்புத் துறை வளர்ச்சி மற்றும் சாதகமான பொருளாதார அபிவிருத்திக்கு எம்மால் நேர்மறைப் பங்களிப்பு செய்ய முடிந்துள்ளது என்று நாம் உறுதியாக நம்புகிறோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

"அதிவேக ஃபைபர் இணைப்பு (FTTH), கம்பியில்லா 4G இணைப்பு (LTE) மற்றும் கிளவுட் தொழில் நுட்பங்கள் போன்ற டிஜிற்றல் தீர்வுகளில் வாடிக்கையாளர்கள் ஆர்வம் மற்றும் தேவையை கொண்டுள்ள வேகமான டிஜிற்றல் யுகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வது எமது பொறுப்பாகும். இதனாலேயே நாம் எமது நிறுவனத்தை டிஜிற்றல் சேவை வழங்குநராக மாற்றி வருகிறோம்" என்று உடைமைக் கம்பனியின் தலைமை நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா குறிப்பிட்டார்.

2018ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 1.3 பில்லியன் ரூபாயை எட்டுவதாக 75% YoY சிறந்த நிகர இலாபத்தை பெற்றுள்ளதாக உடைமைக்கம்பனி, SLT அறிக்கையிட்டுள்ளது. அண்மைக் காலத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தி FTTH மற்றும் LTE போன்ற வாடிக்கையாளர்களின் தேவைக்கு உயர்தர சேவைகளை வழங்கும் நோக்கோடு, நிறுவனமானது தனது முதலீடுகளை விரிவுபடுத்தி தொடர்ந்து வருவாயை அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக நிறுவனத்தின் வருவாய் 2018 இன் முதல் ஒன்பது மாதங்களில் 5.6 வீதத்தால் அதிகரித்து 35.3 பில்லியன் ரூபாயை எட்டியுள்ளது. பயனுள்ள செலவு முகாமைத்துவ முயற்சிகள் காரணமான செயற்பாட்டு செலவுகளை 24.9 பில்லியன் ரூபாயாக நிர்வகிக்க நிறுவனத்தால் முடிந்துள்ளது. நிறுவனத்தின் EBITDA YoY 19.1% அதிகரிப்புடன் 10.3 பில்லியன் ரூபாயாக அறிக்கையிடப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் இதே காலப்பிரிவுடன் ஒப்பிடுகையில் EBITDA வரம் பெல்லை 26.0 வீதத்தில் இருந்து 29.3 வீதமாக முன்னேற்றம் கண்டுள்ளது.

தலைமை செயற்பாட்டு அதிகாரி பிரியந்த பெர்னாண்டோ கூறும்போது, "நாடெங்கும் பரவியுள்ள வலுவான பிராந்திய கட்டமைப்பு மூலம் வாடிக்கையாளர்களின் அனுபவங்களை மேம்படுத்தி அனைத்து துறைகளிலும் சிறப்பாக செயற்படுவதை நாம் தொடர்ந்து அவதானம் செலுத்தியுள்ளோம். எனவே, எமது வாடிக்கையாளர்களின் பல்வகை தேவைகளுக்கு சேவை செய்ய நாம் சிறந்த முறையில் தயாராக உள்ளோம்" என்று கூறினார்.

சவால்மிக்க பேரினப் பொருளாதார சூழல் மற்றும் சந்தையில் தீவிர போட்டி ஆகிய வற்றிற்கு மத்தியில் துணை நிறுவனமான மொபிடெல் தனது வருவாய் மற்றும் முக்கிய இலாப குறிகாட்டிகளில் தொடர்ச்சியான வளர்ச்சியை காட்டுகிறது.

செயற்பாட்டு செயற்திறன் மூலம் வலுவான வருவாய் வளர்ச்சியின் உதவியோடு, 2018 இன் முதல் ஒன்பது ஆண்டுகளுக்காக மொபிடெல் EBITDA மற்றும் EBIT (வட்டி வரிக்கு முந்தைய வருவாய்) முறையே YoY வளர்ச்சி 10 வீதம் மற்றும் 16 வீதத்தைக் கொண்டுள்ளது. 2017 இன் முதல் ஒன்பது மாதங்களின் நிகர இலாபம் 2.5 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் 2018 இன் முதல் ஒன்பது மாதங்களின் நிகர இலாபமும் 2.5 பில்லியன் ரூபாயாக பதிவிடப்பட்டுள்ளது. ஆண்டின் ரூபாயின் வீழ்ச்சி நிறுவனத்தின் இலாபத்தில் குறிப்பிடத்தக்க அளவு குறைப்பை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும் இந்த வெளிச்சவால்களுக்கு மத்தியிலும் நிறுவனத்தின் நிகர இலாப வளர்ச்சி 3.0 வீதம் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.




# ஹன்சாட் அறிக்கை திரிபுபடுத்தப்பட்டது

## நிமால் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற செயற்பாடுகள் குறித்த ஹன்சாட் அறிக்கை திரிபுபடுத்தப்பட்டுள்ளதென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குற்றஞ் சாட்டியுள்ளார். அதனால் குறித்த அறிக்கையை வெளியிடுவதை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டட தொகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி சபாநாயகர் கரு ஜெயசூரிய செயற்படுகின்றார் என்றும், பிரதமர் மற்றும் ஆளுந் தரப்பின்றி சபை அமர்வுகளை கொண்டு செல்கின்றார் என்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.


நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறியே சபாநாயகர் தொடர்ச்சியாக செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டிய நிமால் சிறிபால டி சில்வா, நிலையியற் கட்டளைக்கு அமைவாகவும் மத்தியஸ்தமாகவும் செயற்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
| --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 100 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 400 | 330 | 400 |
| தக்காளி | 400 | 300 | 380 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 160 | 100 | 120 | 150 | 120 |
| கரட் | 160 | 280 | 220 | 220 | 320 |
| பூசணி | 80 | 50 | 60 | 40 | 80 |
| புடோல் | 180 | 160 | 120 | 200 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 250 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 200 | 95 | 120 |
| பாகற்காய் | 300 | 300 | 240 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 140 | 250 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 200 | 140 |
| லீக்ஸ் | 200 | 220 | 220 | 150 | 240 |
| பீற்றூட் | 150 | 150 | 160 | 60 | 200 |
| கறிமிளகாய் | 300 | 350 | 240 | 210 | 240 |
| முருங்கைக்காய் | 500 | — | — | — | 400 |
| போஞ்சி | 200 | 180 | 150 | 250 | 120 |
| கத்தரிதம்புள்ள | 120 | 200 | 100 | 150 | 120 |
| கீரை - 1பிடி | 60 | 60 | 70 | 30 | 80 |
| தேசிக்காய் | 500 | 500 | 400 | 460 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 200 | 160 | — | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 120 | 140 | 15 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 | 15 | 60 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | 60 | 130 | 80 |

# நீதி, நியாயத்துக்காக 'ஜம்பர்' அணியவும் தயார்

## சபாநாயகர் கரு தெரிவிப்பு



(கொழும்பு)

நான் குற்றம் செய்திருந்தால் நீதி, நியாயத்துக்காக 'ஜம்பர்' அணிவதற்கும் தயாராகவே இருக்கின்றேன் என தெரிவித்த சபாநாயகர் கரு ஜெயசூரிய, என்மீது நம்பிக்கை இல்லையென்றால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து என்னை பதவி நீக்குங்கள் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சபை அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்ட போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் சபாநாயகர் மீதான விமர்சனம் குறித்தும் ஹன்சார்ட் அறிக்கை பொய்யாக எழுதப்படுள்ளதாகவும் ஆகவே சபாநாயகர் சிறைக்கு செல்ல வேண்டும் என ஆளும் தரப்பு குற்றம் சுமத்தும் கருத்துக்கள் குறித்து கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் தி. ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (இ-9-136)

# எனது உயிரைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சபாநாயகரிடம் வடிவேல் சுரேஷ் மன்றாட்டம்



(கொழும்பு)

தனது உயிரை பாதுகாப்பதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் நேற்று முன்தினம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம சிறப்பு ரிமை மீறல் பிரச்சினையை எழுப்பி உரையாற்றும் போதே வடிவேல் சுரேஷ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் சிறுபான்மையின பாராளுமன்ற உறுப்பினர் எனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன. எனக்கு வீட்டில் இருக்கவும் பாதுகாப்பு இல்லை. பாராளுமன்றம் வந்தால் மிளகாய் தூள் வீசுகின்றனர். எனது தொகுதிக்கு செல்லும் போது இனவாதம் பேசி என் மீது அசிட் வீசவும் முயற்சிக்கின்றனர். இது சம்பந்தமாக பசறை பொலிஸார் அறிந்துள்ளனர். நான் முறையிட்டு 3 நாட்கள் கடந்துள்ள போதும் அது தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை. இவ்வாறான நிலைமையில் நாங்கள் எப்படி வாழ்வது எனவும் கேள்வி எழுப்பினார். (இ-7)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

பொறளை, ரீ 20 தோட்டம் பகுதியில் ஹெரோயினுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொறளை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவ லின் அடிப்படையில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே குறித்த நபர் கைது செய் யப்பட்டுள்ளார். இதன் போது சந்தேக நபரிடம் இருந்து 3 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (இ-7)

# வாகனங்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சில மாதங்களில் வாகனங்களின் விலை அதிகரிக்கப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளமை மற்றும் தற்போதைய அரசியலில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற தன்மை என்பவற்றினாலும் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் சில மாதங்களில் வாகனங்களின் விலை நூற்றுக்கு 15 தொடக்கம் 20 சதவீதத்தால் அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. லங்கா வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரன்சிகே இதனை தெரிவித்துள்ளார். (இ-7)

## சிறுவர் அரங்கம்

# ஒப்பிடாதே



ஒரு ஊரில் ஜென் மதத் துறவி இருந்தார். அவரிடம் மாற்றுத் துணி கூட இல்லை. இருந்த உடையும் கிழிசலாக இருந்தாலும் நேர்த்தியாகச் சரி செய்யப்பட்டிருந்தது. அவரைப் பார்க்கவும் பேசவும் ஆசி பெறவும் பொதுமக்கள் அலை அலையாகத் திரண்டு வந்தனர்.

கூட்டத்தில் மிகப் பெரும்பாலானோர் அந்தத் துறவியின் கால்களைத் தங்கள் கைகளினால் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

ஜென் துறவியின் புகழ் பரவியது. இது மெல்ல மெல்ல அரண்மனை வரை சென்றது. இந்தத் துறவியைப் பற்றி அந்நாட்டுத் தளபதி கேள்விப்பட்டான். அவனுக்கு எரிச்சலாக இருந்தது. உடனடியாகத் தான் அந்தச் சாமியாரைக் கண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

அவன் கண்டிக்க நினைத்ததற்கு வேறு ஒரு முக்கிய காரணமும் இருந்தது.

“நான்தான் அந்த நாட்டிலேயே முக்கியமானவன், தனக்கு அப்படிப்பட்ட புகழ் வாய்க்காமல், கேவலம் ஒரு சந்நியாசிக்கு இப்படிப்பட்ட புகழ் கிடைத்துள்ளதே” என்ற பொறாமை தான்.

அவன்அன்றையதினமே அந்தத் துறவியைக் காண்பதற்குச் சென்றான். “தளபதி வருகிறார்” என்றவுடன் துறவியைச் சுற்றி இருந்த கூட்டம் வழி விட்டு ஒதுங்கி நின்றது. துறவியை மேலிருந்து கீழ் வரை உற்று நோக்கினான்.

“நான் இந்த நாட்டின் தளபதி. விதம் விதமான ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றவன். பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள் என்னிடம் உண்டு. நான் அரண்மனைக்குள் நுழைந்தால், தெருவில் நடந்தால், எல்லோரும் என்னைத் தெய்வம் போலக் கருதிக் கை எடுத்து வணங்குவார்கள்.

“இப்போது என்னவென்றால், பார்க்கப் பிச்சைக்காரனைப் போலத் தோற்றமளிக்கக் கூடிய, அடுத்த வேளை சாப்பாட்டுக்கூட இல்லாத உன்னை ஒரு பொருட்டாக மதித்து, அதிக மரியாதை கொடுத்துக் கால்களில் விழுந்து வணங்கிச் செல்கிறார்கள். அதுதான் ஏன், ஏதற்காக என்று எனக்குப் புரியவில்லை” என்றான்.

அவனுடைய பேச்சை ரசித்துக் கேட்ட அந்தத் துறவி அவனை அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்குப் பின்னாலிருந்த ஒரு பூந்தோட்டத்துக்கு வந்தார். அதில் வண்ண வண்ண மலர்கள் மலர்ந்திருந்தன.

அன்றைய தினம் பௌர்ணமியாதலால் முழுநிலவு தன் வெளிச்ச முகத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

வானத்தில் ஒளிரும் நிலவைச் சுட்டிக்காட்டி, “அது என்ன?’ என்று கேட்டார் துறவி.

“அதுவா, அது நிலவு!” என்றான் தளபதி.

பின்னர் துறவி தன் அருகே பூத்திருந்த ஒரு ரோஜா மலரைச் சுட்டிக் காட்டி “இது என்ன?” என்று கேட்டார்.

தளபதி எரிச்சல் அடைந்தான். இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல், “இது ரோஜாப் பூ!” என்றான்.

இந்த ரோஜாப்பூ என்றைக்காவது ஒருநாள் அந்த நிலவைப் பார்த்து, ஆஹா இந்த நிலவு எத்தனை அழகு! இதைச் சுற்றி எவ்வளவு ஒளி வெள்ளம்! நான் அந்த நிலாவைப் போல அவ்வளவு வெண்மையாக இல்லையே என்று ஒப்பிட்டுப் பார்த்ததுண்டா இல்லை அல்லவா?

அதேபோல அந்த நிலவு கீழே உள்ள இந்த ரோஜா மலரைப் பார்த்து, “நாம் இந்த மலரைப் போன்று நிறத்தில் இல்லையே, மிருதுவாக இல்லையே என்று வருத்தப்பட்டதுண்டா?” இல்லையே. ரோஜாப் பூவின் அழகு ஒரு விதமானது. நிலவின் அழகு வேறு விதமானது! என்றார்.

துறவி சொன்னதைக் கேட்டவுடன் தளபதியின் கண்கள் கலங்கின.

“தங்களை மரியாதைக் குறைவாக நடத்தியதற்கு வருந்துகிறேன் துறவியே! என்னை மன்னிக்க வேண்டும்!” என்று அவர் கால்களில் விழுந்து வணங்கினான் தளபதி.

## மனிதன் மனிதனாக வாழ

- மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் - தாய்,தந்தை
- மிக மிக நல்ல நாள் - இன்று
- மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
- மிகவும் வேண்டியது - பணிவு
- மிகவும் வேண்டாதது - வெறுப்பு
- மிகப் பெரிய தேவை - நம்பிக்கை
- மிகக் கொடிய நோய் - பேராசை
- மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
- கீழ்த்தரமான விடயம் - பொறாமை
- நம்பக் கூடாதது - வதந்தி
- ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
- செய்யக் கூடாதது - நம்பிக்கைத் துரோகம்
- விலக்க வேண்டியது - சோம்பேறித்தனம்
- உயர்வுக்கு வழி - உழைப்பு
- நழுவ விடக் கூடாதது - வாய்ப்பு
- பிரியக் கூடாதது - நட்பு
- மறக்கக் கூடாதது - நன்றி

இவைகளை மனிதர்கள் பின்பற்றினால் இருப்பதை விட சிறப்பாக வாழலாம்.

## சிந்திக்க சில

- பேசும்முன் கேளுங்கள். எழுதும்முன் யோசியுங்கள். செலவழிக்கும்முன் சம்பாதியுங்கள்.
- சிலவேளைகளில் இழப்புத்தான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
- யாரிடம் கற்கிறோமோ அவரே நம் ஆசிரியர். கற்றுக்கொடுப்பவரெல்லாம் ஆசிரியர் அல்லர்.
- நாம்மாறும்போது தானும் மாறி, நாம் தலையசைக்கும் போது தானும் தலையசைக்கும் நண்பன் நமக்குத் தேவையில்லை. அதற்கு நம் நிழலே போதும்.
- நோயைவிட அச்சமே அதிகம் கொல்லும்.
- நான் குறித்த நேரத்திற்குக் கால்மணி நேரம் முன்பே சென்று விடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கியது.

## விடுகதைகள்

- போகும் போது கிழவி. வரும் போது குமரி. அது என்ன?

தோல் பறி

- பளிங்கு மண்டபம் கட்டிப் பாலாறு ஒன்று வெட்டி மகாராணி ஒருத்தி மஞ்சள் நீராடுகிறாள். அது என்ன?

முட்டை

- பஞ்சை அதிகம் உண்டு. எப்பொழுதும் பருத்தே கிடக்கும். அது என்ன?

தலையணை

- சித்திரப் பின்னல் கோட்டைக்குள்ளே போக வழியுண்டு. வர வழியில்லை. அது என்ன?

எலிப்பொறி

- கிணற்றில் அம்புகள் போடுவாரே தவிர எடுப்பார் இல்லை. இது என்ன?

மழைத்துளிகள்

- கிட்ட இருக்குது பட்டணம். எட்டிப் பார்க்க முடியலே. அது என்ன?

முதுகு

- ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?

மரம்

என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்.
- மகாகவி பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இம்மியும் தளராத எங்கள் தமிழ் மக்கள்

மாவீரர் நாள் மிகவும் உணர்வுபூர்வமாக; இதயபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் ஒன்றுகூடி ஈகச்சுடர் ஏற்றி மாவீரர்களை அஞ்சலித்தது கண்டு இராணுவமும் பொலிஸாரும் நெகிழ்ந்திருப்பர்.

சிங்கள இனம் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்க மறுத்ததன் விளைவாக தமிழ் மக்கள் இழப்புக்களையும் துன்பங்களையும் தாங்கி நிற்கின்றனர் என்ற உண்மை உணர்த்தப்பட்டிருக்கும்.

தவிர, மாவீரர்களை நினைவுகூருவதில் தமிழ் மக்கள் இம்மியும் பின்னிற்கவில்லை எனும்போது அவர்கள் தளராத உறுதி படைத்தவர்கள் என்ற உண்மையும் கூடவே வெளிப்பட்டுள்ளது.

இதை நாம் கூறும்போது, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தவேளை மாவீரர் நாள் என்றதும் தமிழர் தாயகம் எங்கும் படையினர் குவிக்கப்படுவர்.

மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பவர்கள் ஈகச்சுடர் ஏற்றுபவர்களைத் தேடித் தேடிக் கைது செய்வர்.

அதிலும் குறிப்பாக மாவீரர் நாள் வருகிறது என்றால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் முழுவதும் படைமயமாகிவிடும். கவச வாகனங்கள் அணி வகுத்து நிற்கும்.

ஈகச்சுடர் ஏற்றப்படுவதை எப்படியும் தடுத்துவிட வேண்டும் என்ற குறிக்கோளுடன் சுற்றும் முற்றும் படையினர் பார்த்து நிற்பர்.

இவ்வாறாக ஒரு தடவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் முழுவதும் படையினர் காவல் செய்ய அதே மாவீரர்களுக்கான ஈகச்சுடர் ஏற்றப்பட்டுள்து எனச் சுட்டுவிரல்கள் சுட்டி நிற்கின்றன. படையினர் அங்கும் இங்கும் ஓடித் திரிகின்றனர்.

அதோ! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வானுயர்ந்து நிற்கின்ற தண்ணீர்த் தாங்கி மேல் மாவீரர்களுக்கான ஈகச்சுடர் ஏற்றப்பட்டிருக்கிறது.

2009ஆம் ஆண்டின் இறுதிப் போருக்குப் பின்பு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கின்ற வேளையில், கட்டளைத் தளபதிகளே தமிழர் தாயகத்தின் குறுமன்னர்கள் என்ற ஆயுதமுனை ஆட்சி நடந்தபோது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தண்ணீர்த் தாங்கியில் மாவீரர்களை நினைவேந்தும் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது என்றால்,

மாவீரர் மீது எங்கள் மண் கொண்ட பாசம் வெறும் வேசம் என்றா நினைக்க முடியும்.

என்ன செய்வது தமிழ் மக்கள் தங்கள் உரிமை விடயத்தில் தங்களுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களை நினைவேந்துவதில் எந்தத் தளர்வும் தயக்கமும் இன்றி உறுதியோடு இருக்கின்றனர்.

ஆனால் எங்கள் தமிழ் அரசியல் தலைமை எங்கள் இனத்தின் பெருமையை விற்றுப் பிழைக்க முன்னிற்கிறது எனும்போதுதான் இதயம் கருகிக் கொள்கிறது.

எது எவ்வாறாயினும் தமிழ் மக்களின் உள்ளத்து உறுதி என்றோ ஒரு நாள் விடிவைத் தரும் என்பது சத்தியம்.

### குரோத உணர்வைத் தூண்டும் பதிவுகளால் வன்முறை

# இலங்கை விவகாரத்தில் பாரிய தவறு; ஒப்புக்கொண்டது முகநூல் நிறுவனம்

(லண்டன்)

இலங்கை விவகாரத்தில் பாரிய தவறிழைத்து விட்டதாக உலகின் முதனிலை சமூக ஊடக வலையமைப்புக்களில் ஒன்றான முகநூல் நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

முகநூல் நிறுவனத்தின் கொள்கை தீர்வு விவகாரங்களுக்குப் பொறுப்பான துணைத் தலைவர் ரிச்சர்ட் அலன், லண்டனில் இடம்பெற்ற விசாரணை ஒன்றின் போது இதனை ஒப்புக்கொண்டுள்ளார்.

இலங்கையில் குரோத உணர்வைத் தூண்டும் முகநூல் பதிவுகளை நீக்காமை ஓர் பாரதூரமான பிழையாகும் என அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற இன வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சிங்கப்பூரின் நாடாளுமன்ற உறுப்பினர் எட்வின் தொங் கேள்வி எழுப்பியிருந்தார்.

சிங்களத்தில் வெளியான குரோத உணர்வைத் தூண்டும் முகநூல் பதிவுகளால முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார.

இந்த முகநூல் பதிவுகள், நிறுவனத்தின் நியதிகளுக்கு புறம்பானது அல்லவா என தொங் கேள்வி எழுப்பிய போது, ரிச்சர் அலன் அதனை ஒப்புக் கொண்டுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் கடுமையான முரண்பாட்டு நிலைமை உருவாகியிருந்த சந்தர்ப்பத்தில் இந்த முகநூல் பதிவுகள் பிரசுரிக்கப்பட்டிருந்தது எனவும் இதனால் உயிர்ச் சேதங்களும் உடைமைச் சேதங்களும் ஏற்பட்டதாகவும் தொங சுட்டிக் காட்டியுள்ளார்.

பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இறுதியில் அரசாங்கம் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

முகநூல் பதிவுகள் இந்த முரண்பாட்டு நிலைமையை தூண்டி பூதாகரமாக்கியது என்பதனை நீங்கள் ஒப்புக் கொள்கின்றீர்களா? என முகநூல் நிறுவன துணைத் தலைவரிடம் வினவிய போது ஒப்புக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த முகநூல் பதிவுகளை நீக்குமாறு இலங்கை தொலைதொடர்பு அமைச்சர் கோரிய போதிலும் பதிவுகள் நீக்கப்படாமைக்கான காரணம் என்ன அவர் மேலும் வினவியுள்ளார்.

அதற்கு முகநூல் பணியாளர் ஒருவரின் கவனவீனமே இதற்கான காரணம் என ரிச்சர்ட் அலன் பதிலளித்துள்ளார்.

மேலும், சமூக விரோத அடிப்படையிலான பதிவுகள் கிடையாது என முன்னதாக முகநூல் நிறுவனம் வாதிட்டதாகவும் அதனை ஒப்புக் கொள்கின்றீர்களா தொங் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன்போது இல்லை அதனை ஒப்புக்கொள்ளவில்லை தவறுதலாக இவ்வாறு ஓர் பிழை இடம்பெற்றதாக ரிச்சர்ட் அலன் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த ரிச்சர்ட் அலன், நிறுவனம் பாரதூரமான பிழையொன்றை விட்டுள்ளதாக ஒப்புக் கொண்டுளளார். இவ்வாறான பிழைகளை வரையறுத்துக் கொள்வதே தமது நிறுவனத்தின் பொறுப்பு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சகல மொழிகளிலும் குரோத உணர்வைத் தூண்டும் வார்த்தைகளை கண்டறிந்து அதனை தடுப்பதற்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதற்காக பாரியளவில் முதலீடு செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல்களில் தாக்கம் செலுத்தாது சுயாதீனமான முறையில் தேர்தல்களை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முகநூல் நிறுவனம் தீவிர முனைப்பு காட்டி வருவதாக ரிச்சர்ட் அலன் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற போலிச் செய்திகள் தொடர்பிலான சர்வதேச விசாரணை ஒன்றில் பங்கேற்றபோது இநதக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிணைமுறி மோசடி தொடர்பான மற்றுமோர் அறிக்கை இன்னும் ஒரு வாரத்தில் வரும்

## ஐ.தே.கவுக்கு அரச தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான மற்றுமோர் அறிக்கை இன்னும் ஒரு வாரத்தில் வெளிவரவுள்ளது. இந்த மோசடி தொடர்பிலும் இதில் பங்காளர்களாக இருந்தவர்களின் பெயர்களும் இந்த அறிக்கை மூலம் வெளிவரும எனப் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

ஊடக மாநாடுகளை நடத்திக்கொண்டு கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் சிலரது வாய்கள் இந்த அறிக்கை வெளிவந்தவுடன் மூடிவிடும் என்றும் யாப்பா தெரிவித்தார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இன்னும் ஒரு வாரத்துள் மத்திய வங்கியின் மற்றுமொரு பட்டியல் வெளிவருகிறது. இந்த அறிக்கை வெளிவந்தவுடன் எத்தனை பேர் இந்தப் பட்டியலுக்குள் இருக்கிறார்கள் என்பதை மக்களால் அறிந்து கொள்ள முடியும். இதன் போது ஐக்கிய தேசியக் கட்சியில் எஞ்சியிருப்பவர்களும் முடிந்து விடுவார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக் காரர்கள் சந்தி சந்தியாகப் போராட்டங்கள் செய்வதும் நின்றுவிடும். மத்திய வங்கி மோசடி தொடர்பான அறிக்கை வெளிவந்தவுடன் இந்த மோசடியில் 11 ஆயிரம் பில்லியன் மோசடி என்பதும் தெரியவரும். இதில் பங்காளிகளாக இருந்தவர்கள் எத்தனை பேர் என்பதனையும் அப்போது தெரிந்துகொள்ள முடியும்.

ஜனாதிபதி மத்திய வங்கி தொடர்பில் நியமித்த விசாரணை ஆணைக்குழுவின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் மத்திய செயற்குழுவிலிருந்து 9 பேரை நியமித்தோம். இந்தக் குழு கூடி ஆராய்ந்து ஆணைக்குழுவுக்கு 11 பரிந்துரைகளைச் செய்தது. இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்போது முதலாவதாக மத்திய வங்கியின் ஆளுநரை நீக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் பல மாதங்களாக அதனைச் செய்ய முடியாமல் போனது. பிரதமரும் நிதியமைச்சரும் வெளிநாடு சென்றதன் பின்னரே அவரை நீக்க முடிந்தது. பதில் நிதியமைச்சராக அந்தக் கடிதத்தில் நான் கையெழுத்திட்டேன். அதன் பின்னரே புதிய ஒருவரை நியமிக்க முடிந்தது. புதிய அறிக்கை வெளி வந்தவுடன் கூக்குரலிட்ட ஊடகவியலாளர் மாநாடு நடத்திய எத்தனை பேரின் பெயர்கள் வெளிவரப் போகிறது என்பதும் தெரியவரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# என் மீது கொலைப் பழி சுமத்திய ஜனாதிபதியின் கருத்து குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சரத் பொன்சேகா கோரிக்கை

(கொழும்பு)

தான் தேர்தலில் தோற்றிருந்தால் தன்னை ஆறடி நிலத்தின் கீழ் புதைத்திருப்பார் என மகிந்த ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்திய ஜனாதிபதி மைத்திரி இன்று அவரையே பிரதமராகிவிட்டு ஆட்சிக்கு கொண்டுவந்த எம்மை கொலை சூழ்ச்சிக்காரர்கள் என குற்றம சுமத்துகின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஆசுமாரசிங்க கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின்போது கருத்து தெரிவிக்கையில் அவர் இந்தக் கருத்தினைக் கூறினார்.

தன்னை கொலை செய்ய முயற்சித்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என் மீது குற்றம் சுமத்தினார். நான் அவ்வாறு கொலை முயற்சியில் ஈடுபட்டேன் என்பதற்கு என்ன ஆதாரம் அவரிடம் உள்ளது. இந்தக் கருத்து மிகவும் மோசமானது.

ஆகவே ஜனாதிபதியின் இந்த கருத்து குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
16
2018
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பெண்கள் வெறும் பாலியல் பொருளல்ல. தரணி எங்கும் தடம் பதிக்கும் மனிதவர்க்கம் அவள் என இன்றைய சமூகத்தின் சிந்தனையில் மாற்றத்தை விதைத்திடுவோம்.
JSAC

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2018
"மரம் போன்ற ஒரு அழகான கவிதையை ஒரு போதும் காணமாட்டேன் என நினைக்கிறேன்"
-ஜெய்சி கில்மர் (அமெரிக்க எழுத்தாளர்)

# பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும் இன்று

(பூநகரி)

கிளி /செம்மன்குன்று தமிழ்க் கலவன் பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.கலைச்செல்வன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக விசேட கல்வி வலய அமைப்பின் இயக்குநர் ம.கிறிஸ்ரி டானியல், சிறப்பு அருட்தந்தை யோ. அருள்தாஸ், ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் பொன்.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-84)

# கண்ணீர் அஞ்சலி




## கனகசபை தனபாலசிங்கம்

தொண்டைமானாறு விநாயகர் சனசமூக நிலையத்தின் முக்கிய உறுப்பினரும் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக வீரர்கள் த.ராஜ்குமார், த.சசிகுமார் அவர்களின் அன்புத் தந்தையுமான கனகசபை தனபாலசிங்கம் அவர்கள் 27.11.2018 செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு துயர் அடைவதுடன் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தொண்டைமானாறு விநாயகர் சனசமூக நிலையம்,**
**தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்**

(C-4541)

# மரண அறிவித்தல்



## அந்தோனிப்பிள்ளை நீக்கிலஸ்

**பிறப்பு: 1936.08.03 - இறப்பு: 2018.11.26**

இல.828/1, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், புலோப்பளை கிழக்கு, பளை, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை நீக்கிலஸ் அ்வர்கள் கடந்த (26.11.2018) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (29.11.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து திருவுடல் புலோப்பளை இராயப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புலோப்பளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புலோப்பளை கிழக்கு,**
**பளை, கிளிநொச்சி.**

**தகவல் : குடும்பத்தினர்**
**077 567 4542**

(சி-4546)

## மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் - 2018**



***சித்தியடைந்த மாணவர்கள் பெயர்கள்***

1. லிங்கேஸ்வரன் கவிதரன் - 183
2. முரளிதரன் தருன் - 168
3. அனுஸ்ரீன் ரிசாந்தன் - 168
4. சாந்தகுமார் சமரவன் - 165

***150 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விபரம்***

1. சகாயரூபன் நேருஜன் - 159
2. வேலும்மயிலும் தரணிகா - 151

இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் (13 பேர்), 70 புள்ளிகளுக்கு மேல் (4 பேர்) புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
**பாடசாலைச் சமூகம்**
**மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை.**

(C-4543)

## 22ம் ஆண்டு நினைவு அஞ்சலி / 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி





| கந்தையா சின்னையா | சின்னையா பாறுபதி |
|---|---|
| திதி: பூர்வபக்க தசமி | திதி: அபரபக்க சப்தமி |

நாட்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் – எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாச தீபம் நீங்கள்
உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணை இமை காத்ததுபோல் எம்மை
காலமெல்லாம் காத்த தெய்வங்கள்
உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்
காத்திருப்போம் உங்கள் நினைவுடன்.
ஓம் சாந்தி!

**பத்ம பவனம்**
**வதிரி, கரவெட்டி.**

**என்றும் உங்கள் நினைவில்**
**குடும்பத்தினர்**

(C-4544)

## உயிராபத்து இரு...

ஆபத்து என்பது சம்பந்தமாக பொலிஸ்மா அதிபருக்கும் சிரேஸ்ட உப பொலிஸ்மா அதிபருக்கும் தெரிவித்திருந்தேன். அது சம்பந்தமான செய்திகளை எமக்கு வழங்கியவர் அம்பலாங்கொடையைச் சேர்ந்த டி சில்வா என்பவர். நீங்கள் யாழ்ப்பாணம் வந்தபோது உங்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் இது பற்றித் தெரிவித்திருந்தேன். இதில் சந்தேகத்திற்குரியவராகக் கணிக்கப்பட்டவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் உப பொலிஸ் அதிபர் நாலக சில்வா என்பவர்.

மேற்படி உயிராபத்து சம்பந்தமாக பொலிஸ்மா அதிபரும் சிரேஷ்ட உப பொலிஸ்மா அதிபரும் தெரிந்து வைத்துக் கொண்டிருந்த காரணத்தினால் அவர்களுக்கு இது பற்றி எழுத்தில் தெரிவிக்குமாறு கோரியிருந்தார்கள். இது என்னால் செய்யப்பட்டது. என்னுடைய வாசஸ்தலத்திற்குரிய பாதுகாப்பு கைவாங்கப்பட்டதெனினும் என்னுடைய தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு இற்றை வரையில் தொடர்ந்து வந்துள்ளது.

இன்று (நேற்று) காலை யாழ் பொலிஸ் தலைமையக மேற்பார்வையாளர் என்னுடைய பொலிஸ் பாதுகாப்பு அலுவலர்களை உடனே யாழ் பொலிஸ் நிலையத்தில் வந்து கையெழுத்திடுமாறு கோரியிருந்தார்.

நான் தற்போது கொழும்பில் என்னுடைய பாதுகாப்பு அலுவலர்களுடன் தங்கியிருக்கின்றேன். எனினும் இரு அலுவலர்கள் இன்று (நேற்று) காலை யாழ் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டுள்ளார்கள்.

பொலிஸ்மா அதிபருக்கு அறிகையிடப்பட்ட என்னுடைய உயிராபத்திற்கான காரணங்களை முன்வைத்து என்னுடைய தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பை அனுமதிக்குமாறு மேன்மை தங்கிய உங்களிடம் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். கிழக்கு மாகாண முன்னைய முதலமைச்சர் அவர்களுக்கு தற்போதும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக அறிகின்றேன் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-9)

## ரணில் ஜனநாயகவாதி என்றால்...

பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நேற்று புதன்கிழமை கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதா? இல்லையா என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை. இன்று காலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ள விசேட கூட்டத்தின்போதே அதுகுறித்து தீர்மானிக்கப்படும்.

உண்மையில், அரசமைப்பு மற்றும் நிலையியற் கட்டளைக்கு இணங்க அந்தத் தரப்பினர் செயற்பட்டாலே பிரச்சினை ஏற்படாது. 19 ஆவது திருத்தச்சட்டத்தின் 48 ஆவது உறுப்புரையின் முதலாவது உப பிரிவில், பிரதமர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் உள்ளது என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

19 ஆவது திருத்தச்சட்டத்தை இயற்றியதும் ரணில் விக்கிரமசிங்க என்பதால், அவருக்கும் அது நன்றாகத் தெரியும். இதனால் தான் இதற்கு எதிராக உயர்நீதிமன்றைக்கூட அவர்களால் நாடமுடியாமல் இருக்கிறது.

இல்லாவிட்டால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடியதைப்போல, இந்த விடயத்துக்கும் நாடியிருக்கலாமே? ரணில் விக்கிரமசிங்க, 2015 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே தன்னை பிரதமராக நியமிக்க வேண்டும் என்று மைத்திரிபாலவிடம் தெரிவித்தே, பிரதமர் பதவியைக் கைப்பற்றினார்.

அதுவும் தனக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்கி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இவ்வாறு வெறும் பேச்சுக்கு மட்டும் தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, ஜனாதிபதி கதிரையில் அவர் அமரவைத்தார்.

இது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்குக் கூடத் தெரியாது. இதுதான் ரணில் விக்கிரமசிங்கவின் ஜனநாயகம். அவர் உண்மையான ஜனநாயகவாதி என்றால் கட்சித் தலைவர் பதவியை வேறு ஒருவருக்கு வழங்கியிருக்க வேண்டும். ஒரு நபருக்காக ஒட்டுமொத்த நாடும் பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும், சபாநாயகரும் 122 பேரின் பேச்சைக் கேட்டுத்தான் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.

அவருக்கு அரசாங்கத் தரப்பினர் தொடர்பில் எல்லாம் அக்கறையில்லை. இவ்வாறான நிலையில், நிலையியற் கட்டளைகளுக்கு உட்பட்டு நாடாளுமன்ற அமர்வுகளை முன்னெடுக்குமாறுதான் நாம் கேட்டுக்கொள்கிறோமென கூறினார். (3)

## நிதி நிறுவன ஊழியர்கள் இருவருக்கு...

பெண்ணை அச்சுறுத்தியுள்ளனர். அவர் அணிந்திருந்த தங்க நகையை குற்றவாளிகள் அபகரித்துச் சென்றுள்ளனர். அவர்களின் இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதனால் குடும்பப் பெண்ணை அச்சுறுத்திய குற்றத்துக்கு எதிரிகள் இருவரும் தலா ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தவேண்டும். குடும்பப் பெண் அணிந்திருந்த தங்க நகையை அபகரித்துச் சென்றதற்கு குற்றவாளிகள் இருவருக்கும் ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத காலப் பகுதியில் யாழ்ப்பாணம் சுண்டுக்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த இருவர், அந்த வீட்டில் வசிக்கும் குடும்பத் தலைவரால் லீசிங் முறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்துக்கான தவணைப் பணத்தை அறவிடுவதற்கு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

எனினும் குடும்பத்தலைவர் வெளியில் சென்றிருப்பதாக அவரது மனைவி, நிதி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களிடம் தெரிவித்துள்ளார். அதனால் குடும்பப் பெண்ணை அவர்கள் அச்சுறுத்தியதுடன், அவர் அணிந்திருந்த தங்க நகையையும் அறுத்து எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பொலிஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்தின் ஊழியர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளில் சந்தேகநபர்கள் இருவரும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் அவர்களுக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வந்தன. பெண்ணை அச்சுறுத்தியதாக முதலாவது குற்றச்சாட்டும் அவர் அணிந்திருந்த தங்க நகையை அபகரித்துச் சென்றனர் என்று இரண்டாவது குற்றச்சாட்டும் சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் மூத்த சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ் மற்றும் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். குற்றப்பத்திரிகை மீதான விளக்கம் நிறைவடைந்தது. இந்த நிலையில் தண்டனைத் தீர்ப்புகடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது. (3-9)


## மரண அறிவித்தல்



திருமதி தபானந்தம் சங்கநிதி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதியை வசிப்படமாகவும் கொண்ட திருமதி தபானந்தம் சங்கநிதி அவர்கள் (28.11.2018) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.59, பொற்பதி வீதி,
கொக்குவில்.

(6597)

- குடும்பத்தினர்


## ஆவாக் குழுவின்...

ளுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த அவருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பல வழக்குகள் நிலுவையிலுள்ளன.

அந்த வழக்குகளில் அசோக் மீது பிடியாணை உத்தரவுகள் நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் சந்தேகநபர் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தனது சட்டத்தரணி கீர்த்தனா அயூரன் ஊடாகச் சரணடைந்தார்.

2014ஆம் ஆண்டு இடம்பெற்ற இருவரை வெட்டிக் காயப்படுத்திய குற்றச்செயல்கள் இரண்டு தொடர்பில் தனித்தனியே இடம்பெறும் வழக்குகளிலேயே அவர் நேற்று நீதிமன்றில் முற்பட்டார். சந்தேகநபருக்கு எதிராக உத்தரவிடப்பட்ட பிடியாணைகள் தொடர்பில் ஆராய்ந்த மன்று, அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

ஆவா குழுவின் தலைவர் என பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்படும் மோகன் அசோக் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்று அறிந்த பொலிஸார் மல்லாகம் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியில் காத்திருக்கின்றனர்.

அத்துடன், சுன்னாகம் பொலிஸ் அதிகாரிகள் மன்றின் அனுமதியுடன் அவரை விசாரணைக்கு உட்படுத்த முயற்சித்தனர் என அறியமுடிகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக முன்னெடுக்கப்படும் சிறப்பு பொலிஸ் சோதனை நடவடிக்கையின் ஊடாக ஆவா குழு உள்ளிட்ட வன்முறைக் கும்பல்களைச் சேர்ந்த 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (3-9)

## ஜனாதிபதி தேர்...

ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு இன்னும் 13 மாதங்கள் வரையில் இருக்கின்றன. அதற்கு முன்னதாகவே தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் இல்லை.

அதேநேரம் தற்போதுள்ள அரசியல் நெருக்கடிக்கு ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தீர்வாக அமையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (3)

## பெண்ணிடம்...

கைதடி சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் நடந்துவந்த பெண்ணொருவரின் தங்கச்சங்கிலியினை அபகரித்துக் கொண்டு செல்லும்போது திருடனை துரத்திச்சென்ற கைதடி வாலிபர்களால் மடக்கி பிடித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (3)

## நம்பிக்கையை...

தாமைர மொட்டு உள்ளிட்ட அணியினருக்கு நாடாளுமன்றில் 100 உறுப்பினர்களின் ஆதரவினைக் காட்டமுடியுமா? என கேட்கிறேன்.

அப்படி இல்லையேல் உங்களுக்கு இருக்கும் உரிமை என்ன?, அதிகாரம் என்ன?, உங்களுக்கு அமைச்சரவைக்குள் நுழைய முடியாது. பலவந்தமாக அரசாங்கத்தை அமைக்க முடியாது. அந்த காலம் முடிந்து விட்டது.

2015 ஆகஸ்ட், செப்டம்பரில் இருந்து பாராளுமன்றில் எங்களுக்கு பெரும்பான்மை இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

எந்தநேரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் அதனைத் தோற்கடிக்கவும், நம்பிக்கையை காண்பிக்கும் யோசனையை கொண்டு வந்தால், அதனை வெற்றிக்கொள்ளவும் தேவையான பெரும்பான்மை எம்மிடமே இருக்கிறதென கூறினார். (3)

## பிரதமர் பதவியி...

ஜனாதிபதியின் உத்தரவுக்கு சாதகமாக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என்றும், பாதகமான தீர்ப்பு அளிக்கப்பட்டால், தான் 113 உறுப்பினர்களின் பெரும்பான்மையை நிரூபிப்பேன் என்று அவர் கூறியிருக்கிறார். (3)

## பாராளுமன்று...

மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ளவுள்ளது.

இந் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. (3)

## ஜனாதிபதி, பிர...

ஆண்டின் முதல் 4 மாதங்களுக்கு 1735 பில்லியன் ரூபா அரச செலவுக்கு ஒதுக்கும் நிதி நிலை அறிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையை நிதியமைச்சர் என்ற வகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சமர்பித்திருந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



கொவிசெத
திகதி 2018.11.28
சீட்டிழுப்பு இலக்கம் 1957
ஆங்கில எழுத்து T
வெல்லப்பட்ட இலக்கங்கள் 14 35 39 66
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2018-11-28
சீட்டிழுப்பு இலக்கம் 81
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 01 20 52 79
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/11/2018
சீட்டிழுப்பு இலக்கம் 311
வெற்றி எழுத்து A பவர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 01 02 17 50
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28-11-2018
சீட்டிழுப்பு இலக்கம் 895
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 7 4 5 0 9 1
தேசிய லொத்தர் சபை

## பரிசளிப்பு விழா

(கோப்பாய்)
உரும்பிராய் தொண்டர் கழக ஏற்பாட்டில் கனடா வாழ் உரும்பிராய் மக்களின் அனுசரணையில் உரும்பிராய், ஊரெழு பாடசாலைகளில் தரம் 5-ல் கல்வி கற்ற மாணவர்களிக்கான பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.(3-87)

நல்லூரில்

# GROUP CLASSES

**தரம் 06 தொடக்கம் O/L வரை**

விஞ்ஞானம் K.பகீரதன்
தமிழ் S.நவநீதகிருஸ்ணன்
கணிதம் P.N.மதன்
வரலாறு K.அமுதீசன்
ஆங்கிலம் P.மதன்
வர்த்தகம் S.M.சுரேஸ்

தனிப் பாட அனுமதி உண்டு

Eng. Medium < Maths - P.MATHAN, Science - R.MOHAN

ஆரம்பம் : 05.12.2018 புதன்கிழமை
பிற்பகல் 3.15 மணி

18/18, வைமன் வீதி, நல்லூர். 0777923653
(TCT Super Market பின்புறம்)
(6594)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## மாதாந்த அடிப்படையில் வாகனம் வாடகைக்கு தேவை

பொருட்கள் ஏற்றி இறக்க கூடிய வசதி உடைய TATA அல்லது Mahendra mini truck நிறுவன வேலைக்கு மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு தேவை. வாகனங்களை வாடகைக்கு விட விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 315 1654
(C-4840)

## தொழில் தேடும் உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

வட மாகாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் எமது யாழ்ப்பாணக் கிளைகளுக்கு புதிதாக இளைஞர், யுவதிகள்
**Supervisor, HR, Accountant, Maketing Exicutive, Reception, Training Manager**
போன்ற பதவிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
உணவு, தங்குமிட வசதி, EPF, ETF உடன் 35,000ற்கு மேல் வருமானம்.
வட மாகாணத்தில் எவ்விடத்தில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்
தொடர்பு: 0771237692
(6585)

## பதவி வெற்றிடம்

**1. SALES REP**
**2. SALES EXECUTIVE**

- 25 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது
- குறைந்தது இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவோடு ஊக்கத்தொகையும் வழங்கப்படும்

சனிக்கிழமை (01.12.2018) காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

ANDRA PUBLICATIONS
379,Kasthuriyar Road, Jaffna.
0772607614 | 0777481696
மேலதிக தொடர்புகளுக்கு 0776622981 / 0777481696
(அ-4584)

## சிறுநீரகம் தேவை

வடமராட்சியை வசிப்பிடமாகக்கொண்ட 33 வயதுடைய நபர் ஒருவருக்கு A+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகின்றது.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு : 077 843 5310, 076 185 1314
(6575)

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240
V2 TRAVELS

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-4462)

## நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்

**கல்வியாண்டு - 2019**

ஆரம்பம்: 02.12.2018
ஞாயிறு 7.00 மணி
(C-4538)

## ICT WORLD

Think Smart, Be Smart
37, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

# ICT


தரம் 10,11
(தமிழ், ஆங்கிலமொழி மூல வகுப்புக்கள்)

ஆரம்பம் :- 01.12.2018 .
மாலை 4.00 – தரம் 10
மாலை 5.00 – தரம் 11

ஆசிரியர்
S.Umakanthan (BIT)
(ICT ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)
T.P No :- 0778888604
(அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளலாம்)
(அ-4548)

# EVERSHINE EDUCATION CENTRE

EVERSHINE EDUCATION CENTRE – THINK GLOBALLY ACT LOCALLY
#123, Brown Road, Jaffna.



## புதிய கல்வியாண்டு-2019

| தரம் 11 | தரம் 11 | தரம் 11 | தரம் 10 | தரம் 10 |
|---|---|---|---|---|
| தமிழ் மொழிமூலம் பிரிவு I | தமிழ் மொழிமூலம் பிரிவு II | ஆங்கில மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| 02.12.2018 | 02.12.2018 | 03.12.2018 | 05.12.2018 | 05.12.2018 |
| 2.00 pm - 3.00 pm | 5.00 pm - 6.00 pm | 4.30 pm - 5.30 pm | 3.00 pm - 4.00 pm | 4.00 pm - 5.00 pm |

(6591)

### எமது சேவைகள்

- கற்றல் கையேடுகள், மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.
- ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடாத்தப்படும்.
- பரீட்சையில் உயர்புள்ளி பெறும் மாணவருக்கு குறித்த மாதக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு.
- பல்லூடக எறிகை, நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்.

### தமிழ் மொழிமூலம் யாருக்கு?

**தரம் 10, 11ல் பயிலும்**

- பரீட்சையை மையப்படுத்திய
- த.தொ. தொழினுட்ப பிரயோகத்தை நடைமுறையில் விரும்புகின்ற
- த.தொ. தொழினுட்பத்தில் சிறந்த அடித்தளம் தேடுகின்ற
- எதிர்காலத்தில் த.தொ. தொழினுட்ப துறையில் பணியாற்ற விரும்பும்

மாணவர்களுக்கு மட்டும்

### English Medium-To Whom?

**Only the Grade 10,11 students who**

- Like exam centered approach
- Prefer the application of ICT in real world
- Seek a solid foundation in ICT
- Want to choose ICT as future career
- Wish to grow in an English spoken environment

### பெற்றோரின் கவனத்திற்கு:

- அலகுப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தவறாது தோற்றுதல் வேண்டும்.
- தகுந்த காரணமின்றியோ / முன்னறிவித்தலின்றியோ பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் வகுப்புக்களிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள்.



**S. GOWSIGAN**
**(B.TECH - NETWORK TECH.)**

077 378 4053
www.ictever.com gowsivembadi@gmail.com www.facebook.com/everict

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.